விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 31 | ஆனி 22 | துல்ஹஹ்ஜ் 02 | இதழ் 48
யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 06-07-1989

## இந்தியத் தலையீடு: லலித் கண்டனம்!

(கொழும்பு)

''இந்திய அமைதிப்படை ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கிணங்க இம்மாத இறுதிக்குள் வாபஸ் பெற வேண்டும்'' என்று உணவு கூட்டுறவு விவசாயத்துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.

''இந்தியா எமது நாட்டு உள்விவகாரங்களில் தலையிடுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

இது ஜனநாயகக் கோட்பாட்டிற்கு முற்றிலும் முரணானது'' என்றும் அமைச்சர் அத்துலத் முதலி தெரிவித்தார்.

இந்தியப் படையினரின்

[8-ம் பக்கம் பார்க்க]

## அரச எதிர்ப்பு இயக்கம்;

(கொழும்பு)

அரசுக்கு எதிரான எதிர்ப்பு இயக்கம் ஒன்றை ஆரம்பிக்க அணிதிரளுமாறு பல்கலைக் கழகங்களின் மாணவர் ஒருங்கிணைப்பு குழு பொதுமக்களுக்கு அழைப்புவிடுத்துள்ளது.

(8ம் பக்கம் பார்க்க)

# 15 ஆயிரம் முப்படை தொண்டர் சேவைக்கு அவசர அழைப்பு!

## ஜே. வி. பி. தாக்குதல் தீவிரம்

(கொழும்பு)

தென்பகுதியில் மக்கள் விடுதலை முன்னணியினர் (ஜே. வி. பி.) தமது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ள அதேவேளையில், பாதுகாப்புப் படையினருக்கு உதவுவதற்காக நாடு முழுவதிலுமுள்ள சுமார் 15 ஆயிரம் முப்படைத் தொண்டர்களையும் சேவைக்கு வருமாறு அரசாங்கம் அவசர அழைப்பு விடுத்துள்ளது!

கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ள முப்படைகளையும் சேர்ந்த வீரர்களையும் உடடியாக அருகிலுள்ள இராணுவ, பொலிஸ் நிலையங்களுக்கு செல்லுமாறு அரசு பணித்திருக்கிறது.

தென்பகுதியில் ஜே. வி.பி. தனது தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது. நேற்று மட்டும் ஐ. தே. க. மாகாணசபை உறுப்பினர் ஒருவர் உட்பட பத்துப்போர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். ஜே. வி. பியினரின் அச்சுறுத்தல் காரண

(8-ம் பக்கம் பார்க்க)

## பத்திரிகைத் தணிக்கை

[கொழும்பு]

அவசரகால நிலைமைச் சட்டத்தின் கீழ் பத்திரிகைத் தணிக்கை உடனடியாக அமுலுக்கு வந்துள்ளது.

இதற்கென பத்திரிகைத் தணிக்கைக் குழுவொன்று ஜனாதிபதி திரு. ஆர், பிரேமதாசாவினால் நியமிக்கப்பட்டுள்ளது.

திரு. ரி. எம், குருள்ளே, திருமதி பி. எம். எம். அபயரத்தின, கலாநிதி ஆ. கந்தையா, திரு.ஈ.எஸ். பெர்ணண்டோ ஆகியோர் இந்த பத்திரிகைத் தணிக்கைக்குழுவின் தகுதி வாய்ந்த அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

### 25 ஆயிரம் ஆசிரியர் நியமனம்:
## செப்டம்பரில் வழங்க பணிப்பு

(கொழும்பு)

புதிதாகநியமிக்கப்படவுள்ள இருபத்தையாயிரம் ஆசிரியர்களுக்கான நியமனங்களைச் செப்டம்பர் மாதம் முதலாம் திகதி முதல் வழங்குமாறு ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா கல்வியமைச்சுக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.

(8ம் பக்கம் பார்க்க)

## பாடசாலைகட்கு இன்று முதல் இரண்டாம் தவணை விடுமுறை

(கொழும்பு)

நாட்டிலுள்ள சகல பாடசாலைகளையும் இரண்டாம் தவணை விடுமுறைக்காக இன்று தொடக்கம் மூடுவதென கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

கல்வியமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கல்விப் பணிப்பாளர்களின் மாநாட்டின்போது நாட்டின் தற்போதைய நிலைமைபற்றி மீளாய்வு செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்படதாக அறிவிக்கப்பட்டது.

(8-ம் பக்கம் பார்க்க)

### வதிரி இரும்பு மதவடி சம்பவம்:
## பல வீடுகள் சேதம்!

(வடமராட்சி)

வதிரி இரும்பு மதவடியில் கடந்த திங்களன்று இடம்பெற்ற 'ஷெல்' குண்டுத் தாக்குதலால் பல வீடுகள் சேதமடைந்தன,

மக்கள் இடம்பெயர்ந்தபின்னர் சில வீடுகளில் ரீவி, டெக்ரொக்கப்பணம் போன்ற பல்லாயிரம் ரூபா பெறுமதிவாய்ந்த பொருட்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

சுப்பிரமணியம் தம்பையா (வீரணங்கால்), ஏ. கணபதிப்பிள்ளை [துலாக்கட்டு], திருநாவுக்கரசு குககுமரன் [துலாக்கட்டு; ஆகியோரின் வீடுகள்

(8-ம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் அதிகாரி சுட்டுக்கொலை

(கொழும்பு)

தேசிய குற்றப்புலனாய்வு பணியகத்தைச்சேர்ந்த இரு அதிகாரிகள் நேற்றுச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்ட இருவர்களில் ஒருவர் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பத்திரன என்றும் மற்றவர் கான்ஸ்டபிள் அனுரா என்றும் அடையாளம் காணப்பட்டனர்.

## ஓய்வுபெற்ற ஊழியர்கட்கு அரசு அவசர அழைப்பு

(கொழும்பு)

போக்குவரத்துச்சபை ரயில்வே திணைக்களம், பாதுகாப்பு படைகளிலிருந்து ஓய்வுபெற்ற ஊழியர்களை உடனடியாக கடமைக்கு அமர்த்த அரசு முடிவு செய்துள்ளது.

மீண்டும் வேலை செய்ய விரும்பும் ஊழியர்கள் அருகிலுள்ள சம்பந்தப்பட்ட திணைக்

(8-ம் பக்கம் பார்க்க)

## நாவந்துறையில் பதற்றம்

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறைப் பகுதியில் நேற்று சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து அங்கு பதற்றம் நிலவியது.

இப்பகுதியில் இரு இளைஞர்கள் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## ஊர்காவல் படையினரிடம் துப்பாக்கிகள் அபகரிப்பு
### கடமையில் ஈடுபடவும் பலர் மறுப்பு

(கொழும்பு)

பதுளை தோட்டப்பகுதியில் ஊர்காவல் படையினரிடமிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட துப்பாக்கிகளை தீவிரவாதிகள் அபகரித்துச்சென்றுள்ளனர். ஊர்காவல் படையினர் பலர் அச்சுறுத்தல் காரணமாக கடமையை

(8-ம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் சமாதானம்: நெதர்லாந்தில் திருயாத்திரை

(தென்மராட்சி)

இலங்கையில் சமாதானம் நிலவவேண்டி நெதர்லாந்தில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழர்கள், சமாதானத் திருயாத்திரைத் திருவிழா ஒன்றினை நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

### 'சுவிஸ்' தீ விபத்து:
## பலியான நால்வரும் கரணவாயை சேர்ந்தவர்கள்

(வடமராட்சி)

சுவிற்சர்லாந்தில் ஏற்பட்ட தீ விபத்தில் பலியான நால்வரும் வடமராட்சி கரணவாயைச் சேர்ந்தவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் முதலாம் திகதி சுவிற்சர்லாந்தில் உள்ள சூ என்ற பகுதியில் இலங்கையர் வசிக்கும் கட்டிடத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் நான்கு

(8ம் பக்கம் பார்க்க)

## தமிழ் இளைஞர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

பொலநறுவ பகுதியில் தமிழ் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(8-ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் நேற்று துக்கம் அனுஷ்டிப்பு

(வடமராட்சி)

வடமராட்சியில் நேற்று துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு காணப்பட்டதுடன் போக்குவரத்துச் சேவைகளும் நண்பகலுக்கு பின்னர்ஸ்தம்பிதமடைந்தது.

மில்லரின் இரண்டாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டியே இந்த துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது,

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, பொலிகண்டி போன்ற இடங்களில் வீதிகளில் தோரணங்களுடன் கறுப்புக்கொடிகளும் கட்டப்பட்டிருந்தன.

பாரிய பந்தல்கள் போடப்பட்டு ஒலிபெருக்கி மூலம் சோககீதம் இசைக்கப்பட்டு மாலையில் பல இடங்களில் அஞ்சலிக் கூட்டங்களும் கருத்

(8ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

டைப் பிறீஸர் விற்பனைக்குண்டு, தொடர்பு: நோத் அயன் என்ஜினியர்ஸ் இல. 95, கன்னதிட்டிறேட். யாழ்ப்பாணம். (சி-3042)

ஆண்டு–II பாடநூலுக்கான ஆங்கிலப் பயிற்சி நூல் (புதிய பதிப்பு) New Class Work Book for English Year - II. (PuPils Book 5) வெளியீடு: கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம். (சி-3041)

### பரீட்சை

ஆண்டு 5ற்கான புலமைப் பரிசில் பரீட்சை மாதிரிப் பயிற்சி (தமிழ், கணிதம்) யாழ் நகரிலுள்ள புத்தகசாலைகளிலும், புதிய கல்வி நிலையத்திலும்பெற்றுக்கொள்ளலாம். விலை ரூபா 15–00. வெளியீடு: புதிய கல்வி நிலையம். (சி-3058)

### தேவை

பழைய பித்தளை, செம்பு, அலுமினியம், வெங்கலம் உயர் விலைக்குப் பெறப்படும். பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி–3057)


**UNIVERSITY OF JAFFNA**

**TENDER NOTICE**

Sealed tenders are invited from reputed contractors for the following works.

1. Cleaning and Janitorial services at Department of Siddha Medicine, Uuiversity cf Jaffna at Kaithady.
2. Cleaning and Janitorial services at Ramanathan Academy of fine Arts, University of Jaffna Maruthanamadam.

Tender forms can be obtained from Works Engineer, University of Jaffna from 10-07-1989—12-07-89 on producing a receipt from Bursar, University of Jaffna for the following tender fee for the each tender.

Refundable—Rs. 1000/-

Non-refundable—Rs.200/-

The perfected tenders should be sent to reach the Works Engineer, University of Jaffna on or before 24-7-1989 at 2-00 p. m.

Tender board of University of Jaffna reserves the right to reject any tender.

**ACTG. REGISTRAR**
UNIVERSITY OF JAFFNA,
THIRUNELVELY.
JAFFNA.

(A 334)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


# தென்பகுதியில் 30 பேர் கொலை

(கொழும்பு)

தென்பகுதியில் 48 மணி நேரத்தில் முப்பதுபேர் வரை கொல்லப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். இவர்களில் 15 பேர் படையினர் என்றும் தெரிய வருகிறது.

ஜே. வி. பி. தீவிரவாதிகளின் தாக்குதலில் மேலும் 14 பொது மக்கள் கொல்லப்பட்டதாகவும் பெருந்தொகையான பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொல்லப்பட்ட படையினரில் 12 பொலிசாரும் ஊர் காவல்படை வீரர் ஒருவரும் அடங்குவர். தென்பகுதியில் தற்போது தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# நாட்டின் நிலைகுறித்து பாராளுமன்றில் ஆராய்வு

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய நிலை குறித்தும் போக்குவரத்துச் சபை ஊழியர்களின் வேலைநிறுத்தம் தொடர்பாகவும் பாராளுமன்றத்தில் ஆராயப்பட்டது.

ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் இவை தொடர்பாக தமது கருத்துக்களை இங்கு தெரிவித்தபோது போக்குவரத்து ஊழியர்களின் வேலை நிறுத்தம் குறித்து உடன் நடவடிக்கை எடுக்குமாறும் அரசைக் கேட்டுக் கொண்டனர்.

அவசரகாலச் சட்டம் அமுல் படுத்தப்பட்டபின் நாட்டில் அதிகரித்துள்ள வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாகவும் பல உறுப்பினர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்க கிளிநொச்சி மாவட்டத்துக்கு 'கெயர்' ஸ்தாபனம் உதவி

(யாழ்ப்பாணம்)

கெயர் ஸ்தாபனம் கிளிநொச்சி மாவட்டத்தில் குழாய்க்கிணறு தோண்டுபவர்களுக்கு உதவியளிக்க முன் வந்துள்ளது. இங்குதண்ணீர்த் தட்டுப்பாட்டைப் போக்கும் முகமாகக் குழய்ாக்கிணறுகள் தோண்டுவதற்கு அப்பகுதி மக்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

அனுராதபுரத்திலிருந்து குழாய்க்கிணறு தோண்டும் இயந்திரம் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் கிளிநொச்சி மாவட்டத்தில் குழாய்க்கிணறுகள் தோண்டவிரும்புபவர்களுக்கு மிகவும் குறைந்த செலவில் கட்டிக்கொடுக்கப்படுமென்றும் இதற்கு கெயர் ஸ்தாபனத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# "எமது இறைமை சுதந்திரம் பாதிக்கப்பட்டால் எதிர்ப்போம்"

**- அமைச்சர் ரணசிங்க**

(கொழும்பு)

''இந்தியாவை நாம் எந்த விதத்திலும் மறக்க முடியாது. எமக்கு நட்பு நாடாகவே அது இருந்து வந்துள்ளது. எனினும் இந்தியப் படைகளை வெளியேற்றும் விடயத்தில் அது நடந்துகொள்ளும் முறையை நாம் வரவேற்க முடியாது. இந்தியா எமது நாட்டின் இறைமையையும், சுதந்திரத்தையும் பாதிக்கும் நடவடிக்கையில்ஈடுபடுமாறல் எமது முழு எதிர்ப்பையும் பயன்படுத்துவோம்''.

செய்தித்துறை ராஜாங்க அமைச்சில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் செய்தித் துறைக்கான இராஜாங்க அமைச்சர் திரு. ஏ. ஜே. ரணசிங்க இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:

''இந்தியா உலகின் சிறந்த நாடுகளில்ஒன்று. அங்கிருந்தே எமது பௌத்த மதமும் கலாசாரமும் வந்தன. ஒரு வகையில் நாமும்இந்தியர்கள்தான். ஆனாலும் நாங்கள் எந்த நாட்டுக்கும் அடிபணிய மாட்டோம். இந்தியா எம்மை அடக்க நினைக்குமானல் அதற்காக எம்முடன் சகல எதிர்க்கட்சிகளையும் சேர்த்து போராடத்தயங்க மாட்டோம். (து)

## சுகாதார வார விழா நாளை

(பண்டத்தரிப்பு)

சங்கானை மேற்கு ஆரம்ப சுகாதார நிலையத்தின் மூன்றுவது வருடாந்தப் பொதுக்கூட்டமும், சுகாதார விழாவும் நாளை வெள்ளிக்கிழமை பண்ணாகம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திரு. செ. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம அதிதியாக மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் வி. சிறிகாந்தா கலந்துகொள்வார்.

யாழ். பிரதேச சுகாதார கல்வி அதிகாரி திரு. கா. வைத்தீஸ்வரன், சங்கானை அரசினர் வைத்தியசாலை டாக்டர் ரி. அருமைத்துரை, டாக்டர் இ. பாலபாஸ்கரன், சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் ஆகியோர் உட்பட மற்றும் பலரும் இவ்விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுவர். விழாவில் சிறந்த ஆரோக்கியமான குழந்தைகளுக்கிடையில் போட்டி நடாத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்படவுள்ளது.

## மணிவாசகர் குருபூசை

[யாழ்ப்பாணம்]

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் மணிவாசகர் குருபூசை, சொற்பொழிவு நிகழ்ச்சிகள் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன.

மணிவாசகப் பெருமானுக்கு காலை விசேட அபிஷேகம் நடைபெறும். பிற்பகல் 3-00 மணிக்கு காரைநகர் மணிவாசகர் சபைத் தலைவர் திரு. செ. தேவதாசன் தலைமையில் ஆத்மீக வள்ளல் திரு. நா. முத்தையா சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். மற்றும் சைவப் பெரியார்களும் உரை நிகழ்த்துவர்.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



**மரியார் மனுவல்**

(ராசு மேசன், பிரபல கட்டிட ஒப்பந்தகாரர்)

தோற்றம்: 03-01-1919 மறைவு: 06-07-1987

மலர்ந்தது பத்தொன்பது, தை மூன்று,
தளிர் விட்டது ''ராஜ ரோஜா''

வாழும் நாட்களில் தந்தையாக, குருவாக, நல்லாசிரியராகவும், அன்பின் பிறப்பிடமாகவும் பண்பின் சிகரமாகவும், பொறுமையில் ''பூமகளாய்'' வாழ்ந்த எம்''இதயக் கோவிலுக்கு'' அடித்தது 87ஆடி 6ல் ஆடிக் காற்று அடித்துச் சென்று தங்களின் இறுதி மூச்சை மூடிய கண்களிரண்டு. கலங்கிய கண்கள் எண்ணற்றவை. பொட்டிழந்த மனைவியங்கே! நித்தமும் கண்ணீர் சொரியும் சேய்களங்கே! இறுதி மூச்சு நிற்கும் வரை அருகில் இருக்க முடியவில்லை என்று ஏங்கும் துரதிஷ்டமான மைந்தன் இங்கே.

எண்ணற்ற மக்களோடு பழகினாய், எத்தனையோ பேரை மனிதனாக்கினாய், மனிதரில் மாணிக்கமாய்த் திகழ்ந்த உமது முகம் மறைந்து இரண்டு வருடங்கள் ஆகிவிட்டதோ, நேற்றும் இன்றும் நாளையும் என்றென்றும் உமது நாமம் போற்ற வாழ்ந்து காட்டுவோம்.

என்றென்றும் தங்கள் நினைவோடு வாழும் குடும்பத்தினர்.

உங்கள் பிரிவால் துயருறும்:

**மனைவி. பிள்ளைகள், இளையமகன் மனுவல், மருசலீன் (ஜேர்மனி).**

205/3 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (சி 3051)

## ஆத்ம சாந்திக் கிரியை அழைப்பு

### திருமதி சிவசம்பு சேதுப்பிள்ளை



அன்புடையீர்!

நிகழும் சுக்கில வருடம் ஆனி மாதம் 23-ம் திகதி (7-7-1989) வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணியளவில் எமது அன்புக்குரிய அன்னை திருமதி சிவசம்பு சேதுப்பிள்ளை அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் நயினை தீர்த்தக்கரையிலும், தொடர்ந்து சபிண்டீகரணம் எமதில்லத்திலும் நடைபெறும். தாங்களும், தங்கள் சுற்றஞ்சூழச் சமுகந்தந்து அன்னையின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

''சோதி அகம்'',
நயினாதீவு. (ஏ 335)

## தாயகப்பகுதிகளில் ஒரு லட்சத்து பதினையாயிரம்

# பலஸ்தீனிய சிறுவர்கள் இஸ்ரேலிய தாக்குதலில் பலி!

## பிரான்ஸ் சட்ட ஆணைக்குழு அதிர்ச்சித் தகவல்

(பாரிஸ்)

**இஸ்ரேலியர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பலஸ்தீனியப் பகுதிகளில் இடம்பெற்ற சம்பவங்களில் ஒரு லட்சத்துப் பதினையாயிரம் பலஸ்தீனியச் சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளதாக அதிர்ச்சியூட்டும் தகவல் ஒன்று! வெளியிடப்பட்டுள்ளது.**

இந்தப் புள்ளிவிபரத் தகவலை 'பிரான்ஸ் சட்ட ஆணைக்குழு' அண்மையில் வெளியிட்டுள்ளது. இது தொடர்பாகக் குழு விடுத்த அறிக்கை ஒன்றில் மேலும் தெரிவிக்கையில்;

பலஸ்தீனிய தாயகப் பகுதியில் இஸ்ரேலிய இராணுவம் நிலைகொண்ட பின் இடம்பெற்ற பல்வேறு நடவடிக்கைகளில் சுமார் ஒரு லட்சத்துப் பதினையாயிரம் சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் இருபத்தையாயிரம் பலஸ்தீனியர்களும் கொல்லப்பட்டிருக்கலாம், என்றும் ஆயிரக்கணக்கானோர் காயமடைந்து, ஊனமுற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இஸ்ரேலியர்களின் கட்டுப்பாட்டில் உள்ள மேற்குக் கரையோர, ஹாஸா நிலப் பகுதிகளிலேயே இவ்வாறான கொலைகள் இடம்பெற்றுள்ளன. இப்பகுதியில் சுமார் ஒன்றரைக் கோடி பலஸ்தீனியர்களும், அறுபதாயிரத்துக்கும் உட்பட்ட இஸ்ரேலியர்களும் இருக்கிறார்கள்.

இஸ்ரேலியர்களின் தாக்குதலால் பாதிக்கப்பட்ட சுமார் மூன்று லட்சத்து இருபத்தையாயிரம் சிறுவர்கள் தமது கல்வியைத் தொடர முடியாத நிலைக்குச் சென்றுள்ளதாகவும் அந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

## பெனஷிர் பூட்டோ பிரிட்டன் விஜயம்

(லண்டன்)

பாகிஸ்தான் பிரதமர் பெனஷிர் பூட்டோ குறுகியகால விஜயமொன்றை மேற்கொண்டு பிரிட்டன் சென்றுள்ளார். இந்த விஜயத்தின்போது அவர் பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்க்கிரட் தட்சரையும் பல அமைச்சர்களையும் சந்திப்பார்.

இதன்போது இரு தரப்பு உறவுகள் குறித்தும் பொருளாதார, தொழில் நுட்ப இராணுவ உதவிகள் குறித்தும், போதைவஸ்து கடத்தல் தொடர்பாகவும் பேச்சுக்கள்

(5ம் பக்கம் பார்க்க)

## விம்பிள்டன் அரையிறுதிப் போட்டி

(லண்டன்)

'விம்பிள்டன்' கின்னரெனிஸ் போட்டியின் பெண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் ஆட, ஸ்ரெபிகிராவ், மார்ட்டினு நவரட்லோவா, கிறிஸ் எவர்ட், கதரினு லிங்குஸ் தெரிவாகியுள்ளனர்.

நேற்றைய அரையிறுதி ஆட்டத்தில் ஸ்ரெபிகிராவ், கிறிஸ் எட்வர்ட்டையும், மாட்டினு நவரட்லோவா கதரினு லிங்குஸ்ஸையும் எதிர்த்து ஆடினர்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவு கால் இறுதி ஆட்டத்தில் ஜோன் மக்கன்றோ மாக்ஸ் விலாண்டரையும், ஸ்ரொபன் எட்பேர்க் ரிம் ஹுயிஸ்ஸையும் எதிர்த்து ஆடுகிறார்கள்.

## உலகில் உள்ள சீன மக்களை ஒன்றுசேருமாறு அழைப்பு

### தப்பிச்சென்ற தலைவர்கள் வேண்டுகோள்

(பாரிஸ்)

உலகிலுள்ள சீன மக்கள் அனைவரும் சீனாவில் உண்மையான சுதந்திரம் மலர ஒன்று சேரவேண்டுமென அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இவ்வழைப்பு அமெரிக்காவிலிருந்து சீன அரசு எதிர்ப்பாளர் இருவரால் விடுக்கப்பட்டுள்ளது.

சீனாவில் மாணவர் ஜனநாயக ஆர்ப்பாட்டம் இராணுவத்தால் அடக்கப்பட்டதையடுத்து அரசு எதிர்ப்பு மூத்த தலைவர் திரு. யாங் ஷியாங்கும் மாணவர் தலைவர் ஒருவரும் சீனாவிலிருந்து தப்பிச்சென்று பிரான்ஸிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் அடைக்கலம் தேடியுள்ளனர்.

அங்கிருந்தே இவ்விருவரும் மேற்படி அழைப்பை விடுத்துள்ளதுடன் தொடர்ந்தும் சீன அரசுக்கு எதிரான பெரும் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர். இதற்கென ஓர் இயக்கத்தை ஆரம்பித்து உலகநாடுகளிலிருந்து நிதி வசூலிக்கவும் திட்டமிட்டுள்ளனர்.

இவர்களின் இந்த அழைப்பை ஏற்றுப் பல நாடுகளில் தங்கியுள்ள சீன மாணவர்களும், மக்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர். இந்த எதிர்ப்பு நடவடிக்கையைச் சர்வதேச ரீதியில் பெரிதுபடுத்தவும் இவர்கள் திட்டமிட்டுச் செயற்படுத்தி வருகிறார்கள்.

இவ்விடயத்தில் வெளிநாடுகள் தமக்கு எதிராகப் பெரும் சதி நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும், இதை உடன் நிறுத்தாவிடில் மோசமான விளைவுகளைச் சம்பந்தப்பட்ட நாடுகள் எதிர்நோக்கவேண்டி வருமென்றும் சீன அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை ஜனநாயக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெருந்தொகையானவர்கள் தொடர்ந்தும் கைசெய்யப்பட்டு நீதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இராசி பலன்

06-07-1989

திரிதியை காலை 9.32 வரை, ஆயிலியம் மாலை 4.28 வரை சித்தாமிர்தயோகம். இராகு காலம் 1.28 முதல் 3.02 வரை சதுர்த்தி விரதம்.

மேஷம்: வாக்குவிரோதம் குடும்பகலகம், மறந்தநிலை, சகோதர உதவி, தொழில் கேடு, பயனற்ற செயல்.

இடபம்: தடுமாற்றம், பணச்செலவு, கைப்பொருள் நழுவுதல், மனைவியுடன் கருத்துவேற்றுமை, பயம்.

மிதுனம்: காரியனுகூலம் கடன்வரவு, தொழில் சிறப்பு, பெண்வழி உதவி, மகிழ்ச்சியான சம்பிபம்.

கடகம்: தொழில்தகராறு, கவலைதரும் நிகழ்ச்சி, மக்களால் தொல்லை, பயமுறுத்தப்படல் அலைச்சல்.

சிங்கம்: நினைத்த காரியம் அனுகூலம், தொழில் சிறப்பு, ஞானஉணர்வு, வீட்டில் சிறம்பு, வெகுமதி.

கன்னி: முரண்பாடு மனவேதனை. அதிகாரிகள் சீற்றம், குடும்பவிரோதம், கடிதஉறவு, நண்பருதவி.

(6-ம் பக்கம் பார்க்க)

## சூடானில் யுத்த நிறுத்தம்: இராணுவ அரசு அறிவிப்பு

(கார்ட்டும்)

சூடானில் இடம்பெற்று வரும் ஆறாண்டுகால உள்நாட்டுப் போரை முடிவிற்குக் கொண்டுவரும் பொருட்டு ஒரு மாதகால யுத்த நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆட்சியைக் கைப்பற்றிய இராணுவ அரசு இவ்வறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இத்தகவலை சூடான் தேசிய வானொலி நேற்று ஒலிபரப்பியது. கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இராணுவப் புரட்சிமூலம் ஆட்சியைக் கைப்பற்றிய இராணுவத் தளபதி பிரிகேடியர் ஓமார் ஹாஸன் 'ஆளும் புரட்சிச் சபை' எடுத்த யுத்த நிறுத்த முடிவை நேற்று வானொலிமூலம் வெளியிட்டார்.

இதன்மூலம் கடந்த ஆறு வருடமாகச் சூடானின் வடபகுதியில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் முஸ்லிம் கெரில்லாக்களை ஆயுதங்களைக் கைவிட்டுப் பேச்சுக்களுக்கு வருமாறும் அழைத்துள்ளார். எனினும் இந்த அழைப்பைக் கெரில்லாக்கள் நிராகரிக்கலாமென்றும் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை சூடானில் இடம்பெற்ற ஆட்சிக் கவிழ்ப்பின்போது கைது செய்யப்பட்ட அரசுத் தலைவர்களும், பல கட்சித் தலைவர்களும் தற்போது சிறையில் இராணுவ விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும், குற்றங்கள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் கடும் தண்டனை வழங்கப்படும் என்றும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சகல அரசியல் கட்சிகளும் கலைக்கப்பட்டு, கட்சிகளின் பெருமளவு சொத்துக்களும் பறிமுதல் செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது,

## பிலிப்பைன்ஸிலிருந்து அமெரிக்கத் தளங்களை அகற்றுமாறு ஆர்ப்பாட்டம்

(மணிலா)

பிலிப்பைன்ஸிலுள்ள அமெரிக்க தளங்களும், இராணுவ துருப்புகளும் அகற்றப்படவேண்டுமென ஆயிரக்கணக்கானோர் அமெரிக்க தூதரகம் முன் பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தியுள்ளனர்.

அமெரிக்காவின் 213-வது சுதந்திர தினமான நேற்றுமுன்தினம் பிலிப்பைன்ஸின் தலைநகரிலுள்ள அமெரிக்கத் தூதரகம் முன் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தற்போது பிலிப்பைன்ஸில் இரு அமெரிக்கப் படைத்தளங்களும், சுமார் 25,000 இராணுவத்தினரும் நிலைகொண்டுள்ளனர்.

இந்தத் தளங்களையும், இராணுவத்தினரையும் அகற்றக் கோரி கடந்த சில வருடங்களாகப் பிலிப்பைன்ஸில்பெரும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுவதுஅதிகரித்துள்ளது எனினும் இது தொடர்பாக அரசு எதுவித கருத்தும் தெரிவிக்கவில்லை.

இதேவேளை மணிலாவில் பொலிஸ் உயரதிகாரி ஒருவர் என். பி. எனப்படும் கம்யூனிஸ்ட் கெரில்லாக்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இதையடுத்து கம்யூனிஸ்ட் கெரில்லாக்களுக்கு எதிராகப் பெரும் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## "இ. போ. ச. ஊழியரின் கோரிக்கைகளுக்கு அரசு இணங்கவேண்டும்"

(ஸீ. துவான் நஸீர்)

''இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்களின் மிகக் குறைந்த பட்ச கோரிக்கையான 225 ரூபா சம்பள உயர்வை உடனடியாக வழங்க அரசாங்கம்முன்வரவேண்டும். போராட்ட முன்னணியும் கூட, சம்பள உயர்வு கோரிக்கைகளை நிறைவேற்றும் திகதியை பகிரங்கமாக அறிவிக்குமாறு கோரியுள்ளது. இவர்களின் இந்த நியாயமான கோரிக்கைகளை அரசு ஏற்றுக்கொண்டு நாட்டில் சகஜ நிலையை ஏற்படுத்தவேண்டும்'' என்று மலையக மக்கள் முன்னணியின் சார்பில் அதன தலைவர் திரு. பி. சந்திரசேகரன் விடுத்த பத்திரிகை அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது: ''இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்களின வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெறுகிறது இலங்கை சரித்திரத்திலேயே இவ்வளவு நீண்டநாள் போராட்டத்தை இ போ. ச. ஊழியர்கள் நடத்தியதில்லை இதன் காரணமாக இன்று இந்த நாட்டின் சகல துறைகளும் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளன. போக்குவரத்து சீர்குலைவினால்பொருள

(5ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

துன்பமென்னும் தீயில் புனிதமடையாத நாடு எதுவும் உயர்ச்சியடையவில்லை; எவ்வளவுக்கெவ்வளவு துன்பம் உண்டோ அவ்வளவுக்கவ்வளவு முன்னேற்றம் உண்டு.

— மகாத்மா காந்தி

## நமது நோக்கு

### நூலகங்கள் சேவை மாணவருக்குத் தேவை!

பாடசாலைகளில் பாட போதனைக்குரிய நூல்களை அரசாங்கம் அச்சிட்டு விநியோகிக்கின்றது. இதற்கென பாடத் திட்டங்களைத் தயாரிக்கவும், அத்திட்டங்களுக்கு ஏற்ப பாட நூல்களை எழுதவும், பிரசுரிக்கவும் அரச திணைக்களங்கள் உள்ளன.

பாடசாலைகள் எல்லாவற்றிற்கும் எனத் தயாரிக்கப்படும் நூல்கள், மாவட்டங்கள் தோறுமுள்ள சூழல் வேறுபாடு, பிரதேசப் பண்பாடுகள் ஆகியவற்றைப் பிரதிபலிக்குமென எதிர்பார்க்க முடியாது.

பிரதேசப் பண்பாடுகளை மாணுக்கர் அறியவும், தமது மொழி இலக்கியங்களைப் படிக்கவும், ஆராயவும் உசாத்துணை நூல்கள் அவசியம். குறிப்பாக, விஞ்ஞானத் துறையிலே பாடத்திட்டம் தயாரித்து, பாடநூல் எழுதிப் பிரசுரித்து, மாணுக்கர் கைக்கு வருவதற்குள், புதிய கண்டுபிடிப்புகள், ஆய்வுகள் பல வந்துவிடும். எனவே, அவ்வப்போது வெளிவரும் கருத்துக்களை அறியும் வாய்ப்பு மாணுக்கருக்கு மிக மிக அவசியம்.

க.பொ.த. (உ/த) வகுப்பிற் கற்கும் மாணுக்கர்கள் பெரும்பாலும் ஆசிரியர்கள் வழங்கும் குறிப்புகளிலேயே தங்கியுள்ளார்கள் என்பது உண்மை. காரணங்கள் பல உண்டு. ஒன்று, பாட நூல்கள், உசாத்துணை நூலகள் ஆகியவற்றை அவர்களால் வாங்கிக்கொள்ள முடியாத பொருளாதாரக் கஷ்ட நிலை. நூல்களை உற்பத்தி செய்வதிலுள்ள கஷ்டங்களால் விலை உயர்வு; தமிழ் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பாட உசாத்துணை நூல்களின் விலை அதிகரிப்பு; இவை மாணுக்கரின் வாங்கும் சக்திக்கு அப்பாற்பட்டவையாக உள்ளன.

குறிப்பிட்ட சில பாடசாலைகளைத் தவிர ஏனையவற்றில் பெயரளவில் தானும் நூலகங்கள் இல்லை. இருக்கும் நூலகங்களிலும், பொறுமையாக இருந்து படிக்கும் பழக்கம் அருகிவருகின்றது என்பதை வருத்தத்துடன் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

வார இறுதி நாட்களிலும், விடுமுறை நாட்களிலும் வளர்ந்தோருக்கு மாத்திரமல்லாது, மாணுக்கருக்கும் உதவ வேண்டியவைபொது நூலகங்களாகும். உள்ளூராட்சி நிர்வாகத்தால் நடாத்தப்படும் இந்த நூலகங்கள், காலநிலை காரணமாக, பயன்படுத்த முடியாத நிலையும் ஏற்படுகின்றது. எனினும், கஷ்ட நிலையையும் பொருட்படுத்தாது, நூலகர்கள் சிலர் முயற்சியால் அவை தொடர்ந்தும் பயன்பட்டு வருகின்றன.

சென்ற இரு வருடங்களாகச் சில நூல் நிலையங்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட பணத்தைப் பயன்படுத்தவில்லை என்றும், நூல்கள் வாங்கப்படவில்லை என்றும் செய்திகள் வந்துள்ளன. இக்குறை களைந்து உடன் ஆவன செய்வார்களென நம்புகிறோம்.

புது நூல்களை வாங்கும்போது தரமுள்ள, பல்வேறு துறைகளைச்சார்ந்தவற்றை வாங்குவது நல்லது. அச்சில் வருவதெல்லாம் வாங்கப்படவேண்டியவைஎன்பதை நாம் வலியுறுத்திக் கூற மாட்டோம். வாழ்வுக்கு வழிகாட்டவேண்டிய எழுத்துத்துறையிலே, வியாபார நோக்கத்திற்காக கீழ்த்தர உணர்ச்சிகளைக் கிளறிவிடும் கதைப்புத்தகங்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன. இவை அவசியமா?

ஒவ்வொரு நூல் நிலையத்திற்கும் ஆலோசனைச் சபை ஒன்றை நிறுவி அவர்களோடு கலந்தாலோசித்த பின் நூலகள் வாங்கப்படுமாயின் உச்சபயனைப் பெறலாம். உள்ளூராட்சிக்குப் பொறுப்பான பிரதேச சபை ஆணையாளர், நகர சபைச்செயலாளர் போன்ற பணியாளர்கள் இதிலே கூடியஅக்கறை செலுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

மாணுக்கருக்குத் தேவையான பாடநூல்கள் உசாத்துணை நூல்களுக்கு முன்னுரிமை அளிக்கும்படி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் வேண்டுகோள் நியாயமானதும், உடன் செயற்படுத்த வேண்டியதுமாகும் என்பதே எமது கருத்து.

## ஹஜ் சிந்தனைகள்

மூன்று விடயங்கள் மனிதன் முன்னர் செய்த பாவங்கள் அனைத்தையும் அழித்துவிடும். 1. இஸ்லாத்தை ஏற்றல், 2. (ஹிஜ்ரத்) வெறுத்துச் செல்லல், 3. ஹஜ் செய்தல். இம்மூன்று விடயங்களையும் நிறைவுசெய்வதாலோ அல்லது இவைகளில் ஒன்றையேனும் நிறைவேற்றுவதாலோ இறைவனின் கருணையால் அவரின் பாவங்கள் அழிந்துபோய் விடுகின்றன. ஹஜ் கடமையினை நிறைவேற்றும் ஒருவன் அன்று பிறந்த மழலையைப் போன்று பாவங்கள் நீக்கப்பட்டு பரிசுத்தவாளுகத் திரும்பும்போது அவனின் உள்ளத்தில் எத்தனை சந்தோஷம் தான் எழும்! ஆக இக்கடமை ஒரு புண்ணியம் மிக்க கடமை என்பது தெளிவுற விளங்குகின்றதல்லவா?

தொகுப்பு:- அபூஸனீஹா

# இன்றைய கல்வியில் மாற்றங்கள் அவசியமா?

மனித மேம்பாட்டின், நாகரிகத்தின், உண்மையின் வெளிப்பாடே கல்வி, கல்வியே விநோதம்; கல்வியே அணிகலம்; கல்வியே அருந்திறல். தனிமைப்பட்ட காலத்தும் ஓய்வுற்ற நேரத்தும் அரிய நூல்களை ஆராய்தல் சிறந்த பொழுது போக்கும் விளையாட்டுமாம். கல்வி அழகே அழகு என்று கற்றோர் கூறியிருக்கிறார்கள்.

கல்வி ஒரு கருவியே. இது தன்னைத்தான் உணர்த்துவதன்று. தன்னிலும் வேறு பட்டதும், உயர்ந்ததுமாகிய ஒரு ஞானத்தை அளிக்கும் பெற்றியது. இவ்வறிவு விசேடம் காட்சிவாயிலாகவே ஒருவரை வந்தெய்துவதாம்.

நூல்களைக் கற்றல் முற்றுரு வளிக்கும். சம்பாஷணைத் திறம் வேட்டது மொழியும் விரைவினைக் கொடுக்கும். எழுதும் பயிற்சி, குறையினைத் திருத்தி நிறையினைச் செய்யும். ஆதலால் எழுதும் பயிற்சி முக்கியமானதாகும். சம்பாஷணைத் திறன் ஒரு சிறிது படைப்பினும், யுக்தியோடு புத்தி சாதுர்யம் ஒருங்கமைதல் வேண்டும்.

சரித்திர ஆராய்ச்சி புத்தியைக் கூர்மையாக்கும். இயற்கைத் தத்துவ ஞானம் ஆழ்ந்த அறிவை அளிக்கும். ஒழுக்கம் விழுப்பம் தரும். தர்க்கமும் இலக்கண அறிவும் வாக்குவாதத்தில் வல்லமைவகுக்கும். கல்வியே ஒருவன் குணவமைதியாக மாறுகின்றது. உடல் நோய்களை உரிய சரீரப்பயிற்சி கொண்டு போக்கிக் கொள்வது போல, சொற் சாதுர்யத்தில் ஏற்படும் எவ்வகைக் குறைகளையும் தக்க கல்வியின் துணை கொண்டு அகற்றிக் கொளள் முடியும்.

கிரிக்கட் பந்துகளைச் சுழற்றி எறிதல் பித்தப்பைக்கும் தோட்பட்டைகளுக்கும் உரத்தை ஏற்படுத்தும். உலாவுதல் உதரத்திற்கு உரமூட்டும் குதிரைச்சவாரி செய்தல் தலையங்கத்திற்குத் தக்க நன்மையைத் தரும். இவை போல, பிற உறுப்புக்களுக்கும் தனித் தனி தகுதியைத் தரும் சரீரப் பயிற்சிகளும் பலவுள.

கல்வியில் உளம் வளம் பெறுகிறது; உடல் வலுப் பெறுகிறது. எண்ணம் சிறக்கிறது. நாகரிகம் வளர்கிறது. மறுமலர்ச்சி பெறுகிறது. கல்வியின் மூலம்தான் நாம் முன்னேற முடியும். கல்விதான் நம் நாட்டின் எதிர்காலத்தை உருவாக்கக் கூடியது. நம் வளர்சிக்கும் அடிப்படையானது கல்விதான்.

வாழ்க்கையின் உயர்நெறிகளான சமத்துவம், சுதந்திரம், தியாகம், உதவும் உள்ளம், அன்பு, உண்மை, போன்றவை இலக்கியங்கள் மூலமாக மக்களுக்குப் போதிக்கப்படுகின்றன. வாழ்க்கைத் தொழில் நுட்பம் விஞ்ஞான அறிவு போதிக்கப்படுவதன் மூலம்தான் இன்றைய நாகரிக உலகம் சிறப்பான முறையில் உருவாகி இருக்கிறது.

வெறும் வாய்ப்பாட்டுக் கணக்கால் ஒருபலனும்இல்லை. பரீட்சைக்குத் தயார் படுத்திஞல் போதும் என்ற நிலையே இன்றைய கல்வி அமைப்பாகவுள்ளது.

கல்வியின் முழுப்பயனையும் அடைய வேண்டுமாளுல் மேற்கு நாட்டுக்கல்வியின் வழிமுறைகளை விஞ்ஞான பூர்வமாக ஆராயவேண்டும். நாடும் மக்களும் முன்னேறுவதற்கான கல்வி எமக்கு இன்று வேண்டப்படுகிறது. எமக்கு அளிக்கப்படவேண்டிய கல்வி, எதையும் நன்ருகச்செய்வதற்கு வழிகாட்டியாக இருக்கவேண்டும். மனித மூளையைச் சிந்திக்கவும், தூண்டவேண்டும். மேலும் மேலும் தெரிந்து கொள்ளவேண்டும், புரிந்து கொள்ளவேண்டும். என்ற ஆர்வத்தையும் ஏற்படுத்த வேண்டும்,

நூற்றி ஐம்பதாண்டுகள் ஆட்சி நடத்திய பிரிட்டிஷாருக்கு நாட்டை நிர்வகிக்கவும், தங்கள் கொள்கையைப்பரப்பவும் வேண்டியவர்கள் தேவைப்பட்டது. அதற்கேற்றவாறு கல்வியும் நமது நாட்டில் புகுத்தப்பட்டது.

அரசில் சேவை செய்வதற்காகவும் பரீட்சையில் கேட்கும் கேள்விகளுக்கு பதில் கூறுவதற்காகவும்தான் கல்வியைக் கற்றுக்கொண்டோம். வாழ்க்கையில் உயர்வதற்கு உரிய ஞறையில் நாம் கல்வியைக் கற்றுக்கொள்ளவில்லை. அதற்கேற்ற கல்விமுறை நம்நாட்டில் அமையவில்லை. மனித மூளைக்கு விஷயங்களைத்திணிப்பதற்கு கற்றுக்கொண்டிருக்கிறேமே தவிர, விஷயங்களைப் பற்றி, சம்பவங்களைப் பற்றி, இயற்கை சக்திகளின் நுட்பங்களைப்பற்றி நாம் சிந்திக்க, சிந்தித்ததை ஆராய கற்றுக்றுக்கொள்ளும் முறையில் நம் நாட்டுக் கல்வித்துறை இன்னும் அமைக்கப்படவில்லை.

தனி மனிதனுக்கும் சரி சமுதாயத்திற்கும் சரி பொருள் வளம் மிகவும் தேவை. பொரு

(5-ம் பக்கம் பார்க்க)

- புத்தொளி -

# இத்தி மரத்தாள் வெட்டுக்குளம்நாச்சியம்பாள்

இந்து ஆலயங்கள் பல அமைந்துள்ள நல்லூர், அரியாலை, நாயன்மார்கட்டு கிராமங்களுக்கு மத்தியில் கோயில் கொண்டு, தன்னை நாடிவரும் அடியார்களுக்கெல்லாம் அருள் பாலித்துக்கொண்டிருக்கிருள், வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள்.

நல்லூரை இராஜதானியாகக் கொண்டு ஆட்சிசெய்த சங்கிலிய மன்னனின் அரண்மனைக் கோட்டத்தைச் சுற்றி எண் திசைகளிலும் இருக்கும் ஆலயங்களில் ஒன்ருகத் திகழ்கிறது இவ்வாலயம்.

சங்கிலி மன்னன் அரண்மனையின் எல்லைப் புறங்களைச் சுற்றிவர, பல வகையிலும் கடமைகள் புரியக் குடிமக்கள் அமர்த்தப்பட்டிருந்தனர். இம் மக்களைக் காப்பாற்றிக் கொள்ள ஆங்காங்கே காவல் தெய்வங்களைக் கொண்ட ஆலயங்கள் அமைககப்பட்டன. அல்வாலயங்களுள் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயமும் அடங்கியுள்ளது.

'நாச்சியம்பாள்' என்ற திருநாமம் கொண்ட புவனேஸ்வரி அம்பாள் அடியார்க்கு அருள் பாலித்து நிகழ்த்திய அற்புதங்கள் பல உண்டு.

1943ம் ஆண்டில் உலக யுத்தம் நடந்துகொண்டிருந்தது. அச்சமயம் பஞ்சத்தால் நாட்டில் உள்ள மக்கள் வாடிவதங்கினர். இவ்வாலயப் பதியைச் சுற்றிவர இருந்த மக்களுக்கும் இக்கதி ஏற்பட்டது. மக்கள் எல்லோரும் நாச்சி அம்பாளை அணுகி, அவள் பாதாரவிந்தங்களில் வீழ்ந்து வணங்கி அழுதனர்; முறையிட்டனர். அம்பாள் திருவுளம் கொண்டாள். என்னே புதுமை! இப்பகுதியில் உள்ள விளைநிலங்களில் எல்லாம் என்றுமில்லாதவாறு மரவள்ளிக்கிழங்கு அமோக விளைச்சல் கண்டது. சாமை, குரக்கன் போன்ற சிறு தானியங்களும் பெரு விளைச்சலைக் கொடுத்தன. மக்கள் பசியாற உண்டு மகிழ்ந்தனர். அம்பாளுக்கு வேள்விசெய்து விழாக் கொண்டாடினர்.

வயல் சூழ்ந்த நிலத்தின் மத்தியில் வாழைத் தோட்டங்கள், தென்னஞ் சோலைகளின் நடுவே கோயில்கொண்டிருக்கும் நாச்சி அம்பாளின் ஆலயத்தை சுமார் நூறு வருடங்களுக்கு முன்னர் புனரமைப்பதற்கு. இவ்வாலயத்தைப் பராமரித்துவந்த பரம்பரையைச் சேர்ந்த திரு. ஆண்டி சின்னர் என்பவர் ஈடுபட்டார். இப் புனித கைங்கரியத்துக்கு இவரின் உறவினரான திரு.

(5-ம் பக்கம் பார்க்க)

- ஐ. சண் -

## பலதும் பத்தும்

### தொடக்கிய புகழ் தொடர்கிறதா?

சென்னைப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு முதலில் நடத்திய பட்டப் பரீட்சையில் முதலாவதாக வந்தவர் யார்? தங்கப்பதக்கத்தைப் பெற்றவர் யார்? யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சி. வை. தாமோதரம்பிள்ளையே!

1957ல் சென்னைப் பல்கலைக்கழகம் நூற்ருண்டு விழாவைக் கொண்டாடியது. அவ்வாண்டு நடைபெற்ற பட்டப்பரீட்சையில் முதன் மாணுக்கராகத் தேருவிடினும், விலங்கியற் சிறப்புப் பட்டத்தின் தங்கப்பதக்கத்தை தட்டியவர் யார்? அவரும் யாழ்ப்பாணத்தவரே; மகாஜனுக்கல்லூரியின் முன்னுள் அதிபரே!

அதேயாண்டிலும் சற்று முன், பின்னுன ஆண்டுகளிலும் சென்னையிற் பட்டம் பெற்ற இலங்கையர் பலர் புகழ் பெற்றிருக்கிருர்கள். சிலர் பாராளுமன்றம் சென்றிருக்கிருர்கள். மலையகம், மட்டக்களப்பு உட்பட இலங்கையின் பல்வேறு பகுதிகளிற் கல்விப்பணிப் பாளர்களாக, கல்வியதிகாரிகளாகக் கடமையாற்றிவருகிருர்கள்.

குறிப்பாக, சென்னைக் கிறித்தவக் கல்லூரியின் பட்டதாரிகள் சென்.ஜோன்ஸ், மகாஜனு, யாழ்ப்பாணக் கல்லூரி, வைததீஸ்வரா, ஹாட்லி, கனகரத்தினம் ம. வி. செங்குந்தா, முள்ளியவளை வித்தியானந்தா போன்ற பல கல்லூரிகளின் அதிபர்களாக இருந்திருக்கிருர்கள்! கல்விப் பணிப்பாளர் சித்திரா டீ சில்வா போன்ற சிங்களவர்களும், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம்களும் அங்கு படித்து, கல்விப்பணி செய்கிருர்கள்!

தொடக்கிய புகழ் தொடர்கிறது!

வாணி

## பருத்தித்துறையில் சில கிராமங்கள்
# கடலில் மூழ்கும் அபாயம்
### சட்டவிரோதமாக மணல் எடுப்பதே காரணம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள கற்கோவளம், வராத்துப்பளை, வல்லிபுரப் பகுதிகள் கடலில் மூழ்கும் அபாயம் தோன்றியுள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

இப்பகுதிகளில் கடற்கரை மணல் சட்டவிரோதமாக எடுத்துச் செல்லப்படுவதனாலேயே இந்நிலை தோன்றியுள்ளது.

இக்கடற்கரைப் பகுதியில் மணல் எடுப்பதனால் இக்கிராமங்களுக்கு ஏற்படக்கூடிய அபாயத்தைத் தடுக்கும் நோக்கத்துடனும், இந்த மணலில் கண்ணாடி உற்பத்திக்கான சிறந்த மூலப் பொருளான 'சிலிக்கர்' காணப்படுவதனாலும் இக்கடற்கரைப் பகுதியில் மணல் எடுப்பது தடைசெய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் ஏற்கனவே வர்த்தமானிமூலம் அறிவித்திருந்தது.

மணல் தேவைப்படுவோர் குடத்தனை மணற்காட்டுக கடற்கரையில் எடுக்கலாமென்றும் அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இலகுவாகவும், விரைவாகவும் மணலைக் கடத்திச் செல்லும் நோக்குடன் மணல் ஏற்றுவோர் கற்கோவளம், வராத்துப்பளை, புலோலிப் பகுதிகளின் கடற்கரை மணலையே எடுத்துச் செல்கின்றனர்.

தற்போது கற்கோவளம், வராத்துப்பளை, வல்லிபுரக் கிராமங்களின் கடற்கரைப் பகுதிகளில் மணல் எடுப்பது தடைசெய்யப்பட்டுள்ளதாக மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை மீறுவோர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

---

## பெஷிர்
(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறும். குறிப்பாகத் தெற்காசியப் பிராந்தியத்தில் எழுந்துள்ள பதற்ற நிலைபற்றியும் இங்கு பேச்சுக்கள் நடைபெறும்

பொதுநலவாய அமைப்பில் பாகிஸ்தான் மீண்டும் இணைவது தொடர்பாகவும் இருதரப்பிடையேயும் கலந்துரையாடல் இடம்பெறுமெனஎதிர்பார்க்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை இம்மாதம் 16ம் திகதி இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி பாகிஸ்தான் செல்லவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

---

## தனியார் நிறுவனத்திலும் வேலைநிறுத்தம்

(கொழும்பு)

சம்பள அதிகரிப்பு உட்பட பத்துக் கோரிக்கைகளை முன்வைத்து கடந்த மாதம் 12-ம் திகதிமுதல் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்தியன் ஹியூம் பைப்ஸ் (இலங்கை) லிமிட்டெட் நிறுவனத்தின் ஊழியர்களின் வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெறுகிறது.

இரத்மலானை, ஹபரணை, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலுள்ள இந்த நிறுவன ஊழியர்களின் வேலைநிறுத்தம் தொடர்பாக இதுவரை மூன்றுமுறை பேச்சுவார்த்தை நடைபெற்ற போதிலும் நிறுவனத்திற்கும் ஊழியர்களுக்குமிடையில் இணக்கம் காணப்படவில்லை.

சம்பளம் தவிர்ந்த ஏனைய கோரிக்கைகளை நிறைவேற்ற நிறுவனம் இணங்கியுள்ளதாக நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

---

## இ.போ.ச.ஊழியரின்
(3-ம் பக்கத் தொடர்ச்சி)

களின் விலைகள் பல மடங்கு உயர்ந்துள்ளன. பாடசாலைகள், அரச நிறுவனங்கள், ஆஸ்பத்திரிகள், வங்கிகள் இயங்காத காரணத்தினால் மக்கள் சொல்லொன்னாத் துயரத்தை அனுபவிக்கின்றனர். நாட்டு மக்களின் நலனைக்கருதி அரசாங்கம் தனது பிடிவாதப் போக்கை உடனே கைவிட்டு இ. போ. ச. ஊழியர்களின் நியாயமான கோரிக்கைக்கு இணங்க வேண்டும். ஊழியர்கள் வேலைக்குத் திரும்பினால் மட்டுமே கொடுப்பனவுகள் அமுல் நடத்தப்படும் என்ற போக்கை கைவிட்டு, கொடுப்பனவு வழங்கப்படும் திகதியை பகிரங்கமாக அரசு அறிவிக்க வேண்டும்.''

---

## இன்றைய
[4-ம் பக்கத் தொடர்ச்சி]

ளைச்சேர்க்கும் வழிகளை, அடிப்படைப் பொருளாதாரத்தை தாம் ஆரம்பப்பாடசாலையிலாவது, உயர் நிலைப் பாடசாலையிலாவது தமது பிள்ளைகளுக்குப் புகட்டுகிறோமா? இல்லை. பொருளாதாரத்தைப் பற்றிய அடிப்படை அறிவை, அதன் முக்கியத்துவத்தை இளமனதில் பதியும்படி செய்யவேண்டும்.

மேலைநாடுகளில் தெரிந்த விஷயங்களைக் கொடுத்து அனுமானிக்கச் செய்து அதிலிருந்து தெரியாதஉண்மையைக்கண்டு பிடிக்கச் செய்கிறார்கள். ஒரு சோதனையைச் செய்து காட்டுகிறார்கள். அனுமானிக்கச்செய்கிறார்கள். அதிலுள்ள உண்மையை எடுத்துக்காட்டுகிறார்கள். பிரச்னைகளைக் குழந்தை முன்வைத்து, புரிந்து கொள்ளும் அளவுக்கு பிரச்னைகளுக்கு முடிவு காணும் முறையில் நமது கல்விமுறை இல்லை.

மேற்கு நாடுகளில் மனித மூளையை மனித மனத்தை, கல்வியின் மூலம் தூண்டிவிடுகிறார்கள். அதில் வெற்றியும் பெறுகிறார்கள். இலங்கையில் கல்வி கற்கும் மாணவர்களில் ஒருசத விகிதத்தினரே மேற்படிப்புப் படிக்கிறார்கள். இந்த நிலையும் மாறவேண்டும். பல்கலைக்கழகம் செல்லமுடியாதோர் தமது சொந்தநாட்டில் வாழ்ந்து தமது வாழ்க்கைக்கான தொழிலைச் செய்து வாழவும் கல்விமுறை மாற்றியமைக்கப்படவேண்டும். கல்வியில் அரசியல் கலக்கக்கூடாது.

இலங்கை முழுக்க, பொதுவான, பயனுள்ள கல்வித் திட்டமொன்றை ஏற்படுத்த கல்வியாளர்கள் ஒன்றுசேர்ந்து சில திட்டங்களை வகுத்தல் இன்று அவசியமாகின்றது. தமிழ்மாணவர்களைப் பொறுத்தளவில் தமிழ் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றறியக் கூடிய கல்வி அமைப்பும் உருவாக்கப்படவேண்டும்.

---

## தளபாடங்கள் மீண்டும் ஒப்படைக்கப்பட்டன

(சுன்னாகம்)

இராமநாதன் மகளிர் கல்லூரி விடுதியிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட படுக்கைசுகட்டில்கள் மீளவும் கல்லூரிக்கு ஒப்படைக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒப்படைக்கப்பட்டுள்ள கட்டில்களைப்பழுதுபார்க்கும்பணி முறைசாராக் கல்விப் பிரிவினரால் மேற்கொள்ளப்படுவதாகவும் விரைவில் அவை விடுதி மாணவிகளின் உபயோகத்திற்கு வந்து சேர விருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

---

## ரூபவாஹினியில் மத நிகழ்ச்சிகள்

(கொழும்பு)

''இலங்கை ரூபவாஹினியில் ஏனையமதங்களுக்கும்தத்தமது மத விஷயங்களைப் போதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது இரவு 7-30 மணிக்கு பௌத்த நிகழ்ச்சிகள் மட்டுமே ஒளிபரப்பப்படுகின்றன. இந்நிகழ்ச்சிகள் இனிமேல் ஆறு மணிக்கு ஒளிபரப்பப்படும். இதேபோன்ற மத போதனை நிகழ்ச்சிகள் ஏனைய மதங்களை அடிப்படையாகக்கொண்டு ஒளிபரப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கு ஜனாதிபதியின் அங்கிகாரம் கிடைத்துள்ளது'' என்று செய்தித்துறை ராஜாங்க அமைச்சர் நிருபர்களிடம் தெரிவித்தார்.

---

## இத்திமரத்தாள்
(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தம்பு வல்லிபுரம் என்பவர் ஒத்தாசையாக இருந்ததுடன், தமது குடும்பத்துக்குச் சொந்தமான நிலத்தில் ஒரு பகுதியை ஆலயத்திற்குத் தரும சாசனமாகக் கையளித்தார். இவர்களின் உரிமையாக இருந்த இவ்வாலயம் 1939ம் ஆண்டில் இப்பதிவாழ் மக்கள் அனைவருக்கும் பொதுச் சொத்தாக மாற்றப்பட்டது. இச்செயலுக்கு யாழ். மாநகரசபையின் முன்னாள் தலைவர் சட்டத்தரணி சி. பொன்னம்பலம் அனுசரணையாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

1949ம் ஆண்டில் பரம்பரையாக ஆலயத்தைப் பராமரித்துவந்த திருவெம்பாவை உற்சவ காலத்துத் தர்மகர்த்தாக்கள் 10 பேர்களுடன் மேலும் கும்ப உபயகாரர் பத்துப் பேர் நியமிக்கப்பட்டனர். இப்பொழுது இருபது தர்மகர்த்தாக்களைக் கொண்ட சபை இந்த ஆலயத்தைப் பராமரித்துவருகிறது.

வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத் திருப்பணிகள் ஒவ்வொரு வருடமும் தொடர்ந்து அடியார்களின் உதவியுடன் செய்யப்பட்டுவருகின்றன.

இவ்வாலயத்தின் தர்மகர்த்தாக்கள் சபையின் தலைவர் திரு. சி.இரகுபதி இளைஞராக இருக்கின்றபோதிலும், தர்மகர்த்தாக்கள், பொதுமக்கள் ஒத்தாசையுடன் ஆலயத் திருப்பணிவேலைகளில் தமது முழு நேரத்தையும் செலவிட்டுவருகின்றார்.

ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள், வருடந்தோறும் வரும் புனித தினங்களில திரு ஒளி வெளிக்காட்சி கொடுத்து, பக்தர்களைப் பரவசப்படுத்திவருவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

இந்த ஆனி மாதத்தில் அம்பாள் அலங்கார உற்சவத்தில் எழுந்தருளி அடியார்களை ஆட்கொள்ளுகிறாள்.

நேற்று முன்தினம் ஆரம்பமான அன்னையின் திருச் சுற்றுலா இம்மாதம் 14ந் திகதி தண்டிகை அலங்காரக் காட்சியுடன் நிறைவுபெறும். நாச்சியம்பாளை நாடி நன்மை பல பெற்றிடுவீர்!

''ஐ விளக்கு மரணாதிகளை நினைத்தால்
அடிவயிற்றை முறுக்காதோ''
(வள்ளலார்)

---

# கேள்வி அறிவித்தல்

### பிரதேசக் கல்வித் திணைக்களம், நல்லூர், யாழ்ப்பாணம்.

### ஆசிய அபிவிருத்தி வங்கி - கல்விப் புனருத்தாரண திட்டத்தின்கீழ்

## யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளின் கட்டிடவேலைகள்.

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் யாழ். பிரதேசக் கல்வித் திணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரால் 1989-ம் ஆண்டு யூலை மாதம் 19-ம் திகதி (19-7-89) முற்பகல் 10-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைக்கும் அதன் எதிரே உள்ள தொகைக்கு அல்லது அதனிலும் கூடிய தொகைக்கு, கட்டிட வேலை செய்வதற்கென கல்வித் திணைக்களம், கட்டுவேலைத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கட்டிடத் திணைக்களம் ஆகிய ஏதாவதொரு திணைக்களத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு 1989-ம் ஆண்டு யூலை மாதம் 17-ம் திகதி (17-7-1989) பிற்பகல் 2-00 மணிவரை மீளளிக்கப்படாத கேள்விப் பணமாக ரூபா ஐம்பதும் (ரூ. 50/-) மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா இருநூற்றி ஐம்பதும் (ரூ. 250/-) செலுத்தியதன் பேரில் கேள்விப் பத்திரங்கள் யாழ் கல்வித் திணைக்களத்தில் வழங்கப்படும். கேள்விப் பத்திரப் பணம், கேள்வி வைப்புப் பணம் ஆகியன வங்கிக் கட்டளையாகச் செலுத்தப்படல் வேண்டும். கேள்விகள் 1989-ம் ஆண்டு யூலை மாதம் 19-ம் திகதி (19-7-1989) பிற்பகல் 2-00 மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் திறக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் அதுபற்றி அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் ஒப்பந்தம் கைச்சாத்திடல் வேண்டும். தவறின் மறு அறிவித்தலின்றி தெரிவு இரத்துச் செய்யப்படும்.

கேள்விப் பத்திரங்களுடன் இணைந்து வழங்கப்படும் ஒவ்வொரு வேலைக்குமான கால அட்டவணையின்படியும் ஒப்பந்தப் பிரமாணங்களின்படியும் தவறாது வேலையைப் பூர்த்திசெய்து தரக்கூடியவர்கள் மட்டும் இவ்வேலைக்கு விண்ணப்பிக்கலாம்.

கேள்விப் பத்திரங்கள் முழுவதையும் அல்லது அவற்றின் பகுதியை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் உரிமையைக் கேள்விப் பத்திரச் சபை கொண்டுள்ளது.

மேலதிக விபரங்களை யாழ். பிரதேசக் கல்வித் திணைக்களத்தில் கட்டிட வேலைப் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

செல்வி தி. பெரியதம்பி
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

பிரதேசக் கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

| பாடசாலையின் பெயர் | வேலை விபரணம் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|
| 1. யாழ்/அர்ச்.ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை. | இருமாடிக்கட்டிடம் 157' X 25' 0'' | 1,500,000-00 |
| 2. யா/கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலயம் | இரு மாடிக்கட்டிடம் 40' X 25' | 400,000-00 |
| 3. யா/நெல்லியடி ம. ம. வி. | 3 மாடிக்கட்டிடம் 90'X25' விஞ்ஞானகூடம் | 1,800,000-00 |
| 4. யா/சிதம்பரக் கல்லூரி | இரு மாடிக்கட்டிடம் 110'X25' பெருந்திருத்தவேலைகள் | 1,500,000-00 |
| 5. யா/சிதம்பரக் கல்லூரி | 3 மாடிக் கட்டிடம் 90' X 25' | 1,800,000-00 |
| 6. யா/உடுப்பிட்டி ஆண்கள் கல்லூரி | இரு மாடிக் கட்டிடம் 90' X 25' | 1,700,000-00 |
| 7. யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி | இரு மாடிக் கட்டிடம் 90' X 25' | 850,000-00 |
| 8. யா/ஹாட்லிக் கல்லூரி | 3 மாடிக் கட்டிடம் இல.1 90' X 25' | 1,500,000-00 |
| 9. யா/ஹாட்லிக் கல்லூரி | 3 மாடிக் கட்டிடம் இல.2 90' X 25' | 1,500,000-00 |
| 10. யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை | 3 மாடிக் கட்டிடம் 90' X 25' விஞ்ஞானகூடம் | 1,600,000-00 |

(ஏ-336)

# 5160புதிய ஆசிரியர் நியமனம் தோட்டப்பகுதிகளுக்குதமிழர்

(கொழும்பு)

'நாடளாவிய ரீதியில் மேலும்ஐயாயிரத்து 160 ஆரம்பப்பாடசாலை ஆசிரியர்கள் விரைவில் நியமிக்கப்படவுள்ளனர். ஏற்கனவே வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மூவாயிரம் தமிழ் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களும் 750 சிங்கள ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களும் நியமனம் பெற்றுள்ளனர்என்று கல்விச்சேவை ஆணைச்குழுவின் உதவிச் செயலாளர் திரு. எஸ். ஏ. பிரேமரத்ன 'ஈழநாடு'வுக்குத் தெரிவித்தார்.

ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களாக பயிற்சி பெற்று நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டுள்ள இந்த 5ஆயிரத்து 160 ஆசிரியர்களும் வடக்கு, கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களுக்கே நியமிக்கப்படுவார்கள். இவர்களுள் சுமார் 500 தமிழ் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் அடங்கியுள்ளனர். ஏனையோர் சிங்கள ஆரம்பப்பாடசாலை ஆசிரியர்களாவர். இந்த 500 தமிழ் ஆரம்பப்பாடசாலை ஆசிரியர்களும் கண்டி, கேகாலை, நுவரெலியா, காலி, களுத்துறை, கம்பஹா ஆகிய மாவட்டங்களிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்படுவார்கள்.

தெரிவுசெய்யப்பட்டுள்ளவர்களின் பெயர்ப் பட்டியல்கள் மாகாணசபைகளின் கல்வி அமைச்சுக்கு அடுத்தவாரம் அனுப்பிவைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று திரு. பிரேமரத்ன மேலும் தெரிவித்தார்.

## இராசி பலன்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

துலாம்: கடல்பயணம், உறவினர் வருகை, புதிய சிந்தனை, குடும்ப உல்லாசம், பொருளுதவி.

விருச்சிகம்: தொழில்உறவு, பெண்வழி நேசம், குடும்ப மகிழ்ச்சி, அயலவர் உதவி, பணச்செலவு.

தனு: காரியநஷ்டம் சென்ற இடத்தில் விரோதம், இனசனப்பகை, வேலைப்பளு. எதிரிகள் தொல்லை.

மகரம்: சிறுவிபத்து, அதிகயோசனை, குடும்பச்சண்டை, தொழில் விரோதம், அறிஞர் சந்திப்பு, சோம்பல்.

கும்பம்: விவாகமுயற்சிகள் பிரிந்தவர் கூடுவர், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள். அரசசன்மானம், குடும்ப குதூகலம்.

மீனம்: தொழில்பாராட்டு, குடும்ப உறவில் சலனம், பண வரவு, இளையசகோதரர் பாதிக்கப்படுவர், புகழ்.

# மலையகத் தமிழ்மக்களுக்கு தனிமாகாணசபை அவசியம்

## மலையக மக்கள் முன்னணி அறிக்கை

(கொழும்பு)

மலையகத்தமிழ்மக்கள் செறிவாக வாழும் பிரதேசம் துண்டாடப்பட்டு அவர்களின் பலத்தைச் சிதறடித்து அரசியல் உரிமைகளை நசுக்கும் வகையில் மாகாணஎல்லைகளும் மாவட்ட எல்லைகளும் தேர்தல் தொகுதிகளும் செயற்கையான முறையில் உருவாக்கப்பட்டுள்ளன. எனவே மத்திய- ஊவா-சப்பிரகமுவமாகாணங்கள் சந்திக்கும்மத்தியமலைநாட்டில் மலையகத் தமிழ்மக்கள் அடர்த்தியாக வாழும் பிரதேசம் மீண்டும் வரையப்பட்டு அதிகாரம் பொருந்திய மாகாணசபை வழங்கப்படவேண்டும்.

இவ்வாறு மலையக மக்கள் முன்னணி வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மலையகமக்கள் முன்னணித் தலைவர் திரு. பி. சந்திரசேகரனும், செயலாளர் நாயகம் ஜனாப் பி. ஏ. காதரும் கூட்டாகக் கையெழுத்திட்டுவெளியிட்டுள்ள இவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

பேரினவாத சக்திகள் தமது இனத்தைத்தவிர வேறு எந்த சிறுபான்மை தேசிய இனங்களுக்கும் உரிமைகள் வழங்கப்படுவதை விரும்பமாட்டார்கள். ஆனால் இந்த நாட்டில் சிறுபான்மை தேசிய இனங்களின் அரசியல் உரிமைகளை மதிக்கின்ற பரந்தமனம் படைத்தவர்களும் பெரும்பான்மை மக்கள் மத்தியில் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களுக்கு எமது நிலைப்பாட்டை விளக்குவதும் அவர்களுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வதும் எமதுகடமையாகும்.

### மலையகத்தமிழர் என்ற பதத்தையே பயன்படுத்தவேண்டும்

நாம் இந்திய வம்சாவளித் தமிழர் என்ற பதத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகமலையகத் தமிழர் என்ற சொற்பதத்தை பயன்படுத்தவேண்டும் என்று கோருகின்றோம்.

இந்திய வம்சாவளியினர் எனறு கூறும்போது இவர்கள் அந்நியர்கள், கூலிவேலை செய்வதற்காக இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட இவர்களுக்கு இந்நாட்டில் எவ்வித அரசியல் உரிமையும் கிடையாது என்ற மனோபாவத்தை பேரினவாதசக்திகள் மத்தியில் வளர்த்துவரும் அதேவேளையில் அதேவிதமான தாழ்வு மனோபாவத்தை மலையகமக்கள் மத்தியிலும் ஏற்படுத்தி வருகின்றது,

மலையகத் தமிழ்மக்கள் இந்நாட்டில் உரிமையுள்ள தனித்துவம் பொருந்திய சிறுபான்மைத் தேசிய இனம் என்பதே எமது நிலைப்பாடு. இவ்வாறு நாம் கூறுவது நாம் இந்நாட்டில் வாழும் ஏனைய மக்களிடமிருந்து எம்மை அந்நியப்படுத்திக் கொள்வதற்காக அல்ல அவர்களுடன் சம அந்தஸ்தும் சம உரிமையுமுள்ள ஒரு சமூகமாக தலைநிமிர்ந்து வாழ்ந்து நல்லுறவை வளர்த்துக்கொள்ளவேயாகும்.

### தேசிய உரிமைகள் மறுக்கப்படுகின்றன

தமிழ்பேசும் மக்கள் என்று மேலோட்டமானவரையறைக்குள் எம்மை உள்ளடக்கி தேசிய இன அடையாளங்களை மூடிமறைக்கும்போது எமது தேசிய உரிமைகள் அறவே மறுக்கப்பட்டு விடுகின்றன. எமது தனித்துவமானபிரச்னைகளின் முக்கியத்துவம் புரியப்படாது வெறுமனே அனுதாபத்துக்குரிய மனிதாபிமான பிரச்னையாக மட்டுமே சித்திரிக்கப்பட்டு விடுகின்றன.

எமக்கென ஒரு மாகாண சபையைக் கோருவது எவ்விதத்திலும் தனிநாட்டுக் கோஷம் ஆகாது. நாம் இந்நாட்டில் வாழும் ஏனையதேசிய இனங்களுடனும் ஐக்கியமாகவே வாழவேண்டுமென விரும்புகிறோம்.

நாம் யாருடைய அனுதாபத்திலும் வாழவிரும்பவில்லை. தேசிய ஐக்கியம் என்ற பெயரில் எமது உரிமைகள் அபகரிக்கப்படுவதை விரும்பவில்லை. நாம் விரும்புவதெல்லாம் எமது உரிமைகள் மதிக்கப்படும் ஒரு ஜனநாயக சூழலில் சமஅந்தஸ்து பெற்ற நிலையில் எம்மை அங்கீகரிக்கும் நாகரிக மக்களுடன் மனப்பூர்வமான ஐக்கியத்துடன் வாழ்வதேயாகும்.

உலக நாடுகளில் தேசிய இனப்பிரச்னைக்கு வெவ்வேறு விதமாக தீர்வுகள் காணப்பட்டுள்ளன.

### பிரிந்து போவதன் மூலம் இனப்பிரச்னைக்கு தீர்வு

சில தேசிய இனங்கள் பிரிந்து போவதன் மூலம் தேசிய இனப்பிரச்னையைத் தீர்த்துக் கொண்டுள்ளன. 1905ல்சுவீடனில் இருந்து நோர்வே இவ்

(7-ம் பக்கம் பார்க்க)

# அரசாங்க ஊழியர்களை நண்பர்களாகக் கருதவேண்டும்

(கொழும்பு)

''அரசாங்க ஊழியர்களை அரசாங்கம் நண்பர்களாகவே கருதவேண்டும். எதிரியாக அல்ல,''

இவ்வாறு மக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினர் திரு. தினேஷ் குணவர்த்தன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டில் சகல நடவடிக்கைகளும் இன்று ஸ்தம்பிதமடைந்துள்ளது. அடுத்தடுத்து நெருக்கடிகள் தொடர்ந்து ஏற்படுகின்றன என்றும் அவர் கூறினார்.

# தொழிற் பயிற்சி பெற முறைசாராக் கல்வி பெரிதும்உதவுகிறது

(யாழ்ப்பாணம்)

கல்லூரியை விட்டு வெளியேறிய இளைஞர்கள், யுவதிகள் சுயதொழில் முயற்சியில் ஈடுபட்டு தங்கள் பொருளாதார வளத்தைப் பெருக்கிக் கொள்வதற்கு இப்பயிற்சி நெறிகள் பெரிதும் துணைபுரிகின்றன.'

இவ்வாறு யாழ். நல்லூர் ஸ்தான சீ. சீ. ரீ. எம் பாடசாயி முறைசாராக் கல்வித் திட்டத்தின்கீழ் பாடசாலைகளில் படிப்பை முடித்துக்கொண்டு வெளியேறிய மாணவர்களுக்கு சுயதொழில் பயிற்சி நெறியினை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போது யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி தெரிவித்தார்.

அதிபர் திருமதி ப. சோமகாந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், மாணவர்களுக்கு புத்தம் கட்டுதல், கடதாசிப் பொருட்கள் உற்பத்தி செய்தல் போன்றவற்றிக்கான பயிற்சிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இவ்விழாவில் கலந்து கொண்டு யாழ். கோட்டக்கல்வி அதிகாரி பேசியபோது 'படித்த இளைஞர் யுவதிகளின் பயிற்சியைப் பெறுவதற்கும், முறைசாராக் கல்வி முறை பெரிதும் உதவுகிறது. மாணவர்கள் அனைவரும் இதை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்' என்றார்.

தொழில் நுட்பக் கல்லூரி அதிகாரி திரு. எஸ். சுப்பிரமணியம் உரையாற்றினார்.

# இலங்கை இராணுவத்துக்கு புதிய மருத்துவ நிலையம்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தின் வைத்திய பிரிவின் உபயோகத்துக்கென புதிய மருத்துவ நிலையம் ஒன்று ருகமையில் நிறுவப்படும். இதற்க்கு 20 லட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது.

இப்புதிய மருத்துவ நிலையதின் நிர்மாண வேலைகளை இலங்கை ராணுவத்தின் நான்காவது பொறியியல் படைபிரிவு ஏற்றிருக்கிறது. விளையாட்டு மைதானம், நீச்சல் தடாகம்ஆகியவற்றை கொண்டதாக இது அமைக்கப்படும்.

இக்கட்டிடத்துக்கான அடிக்கல்லை இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்க நாட்டி வைத்தார். இவ்வைபவத்தில் முப்படைகளின் தளபதிகளும் கலந்து கொண்டனர். (து)

அம்பாறையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு

# உலக பல்கலைக்கழகக் குழு நிவாரண உதவி!

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் அண்மைக் காலத்தில் நடைபெற்ற அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாக உலக பல்கலைக் கழக சேவைக்குழு தகவல்களைத் திரட்டியுள்ளது.

உலக பல்கலைக்கழக சேவையைச் சேர்ந்த திரு ஸ்டீவ் அஸ்ப், திரு. ராவ ஆகியோர் 17 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருந்து பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான விபரங்களையும் சேத விபரங்களையும் திரட்டியுள்ளனர்.

பொத்துவில், திருக்கோயில், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, கல்முனை, நிந்தவூர், காரைதீவு, அம்பாறை உட்பட பல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருந்து இவ்விவரங்கள் திரட்டப்பட்டதாகவும், இவர்களுக்கான உதவிகள் வழங்கப்படுவதற்கு உலக பல்கலைக்கழக சேவை தற்போது நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

# மூன்றுவயதுப்பிள்ளைகளுக்கு பாலர் பாடசாலைகள்!

(கொழும்பு)

மத வழிபாட்டுத் தலங்களின் கட்டுப்பாட்டில் இயங்கக்கூடிய வகையில் நாடுமுழுவதும் மூன்று வயது பிள்ளைகள் படிக்கக்கூடிய பாலர் பாடசாலைகள் அமைக்கப்படவுள்ளது,

இத்திட்டத்திற்கமைய நாடு முழுவதிலும் உள்ள 25 நிர்வாக மாவட்டங்களிலும் 100 ஆரம்பபாடசாலைகள் இவ்வாண்டு அக்டோபரில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இத்தொகையை படிப்படியாக அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இப் பாலர் பாடசாலைகளுக்கு ஏற்கனவே இலங்கை திறந்த பல்கலைக் கழககத்தில் பயிற்றப்பட்டுள்ள 2 ஆயிரம் பேர் ஆசிரியர்களாக நியமிக்கப்படவுள்ளனர். இப் பாடசாலைகளில் கற்பதற்கு கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

கல்வி கலாச்சார செய்தித் துறை அமைச்சர் திரு. டபிள்யூ. ஜே. எம். லொக்குபண்டார, உயர்கல்வி விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத். சுகாதார மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத், கைத்தொழில் அமைச்சர்கிரு. ரணில்விக்கிரமசிங்க, எரிபொருள் மின்சக்தி அமைச்சர் திரு பெஸ்டஸ் பெரேரா ஆகியோரைக் கொண்ட அமைச்சரவை உபகுழு செய்த சிபார்சின் அடிப்படையில் இப்பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதியின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இத்தகவல்களை உயர்கல்வி அமைச்சின் அதிகாரிஒருவர் ஈழநாடுவுக்கு தெரிவித்தார்.

எட்டு மாகாணசபைகள் உட்பட பல சமயஸ்தாபனங்களின் நன்கொடை உதவிகளுடன் இப்பாடசாலைகள் அமைக்கப்படவுள்ளன. முதல் கட்டமாக 100 பாடசாலைகள் ஒவ்வொரு நிர்வாக மாவட்டுக்கும் நான்கு என்ற வீதப்படி நான்கு மதத்தவர்களும் அமைக்கப்படவுள்ளது. இப்பாடசாலைகளுக்கான பாடத்திட்டம் உட்பட ஏனையவசதிகளை கல்விஅமைச்சு வழங்கும். (து)

## ரசிகர்களைப் பரபரப்பில் ஆழ்த்தும்

# விளையாட்டு உலகின் சிகரம் விம்பிள்டன் டென்னிஸ்

(விளையாட்டு நிருபர் 'தேவா')

விளையாட்டு உலகில் கடந்த பல வருடங்களாக பெரும் புகழையும் கோடிக்கணக்கான பணத்தையும் பெற்றுத் தரும் ஆட்டமாக இன்று டென்னிஸ் விளங்குகிறது. இதன் சிகரமாக கருதப்படுவது 'விம்பிள்டன் சாம்பியன்' போட்டியாகும்.

இப்போட்டியில் வெற்றி பெறுபவர்கள் அடையும் சந்தோஷத்தைவிட இதில் கலந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கிறதே என்று பெருமையடைபவர்கள் பலர். இதற்கு ரசிகர்கள் வழங்கும் முக்கியத்துவமும் அவ்வாறே.

'உலக டெனிஸ் சாம்பியன்', 'அமெரிக்க டெனிஸ் சாம்பியன்', 'பிரான்ஸ் டெனிஸ் சாம்பியன்', 'ஜெர்மன் டெனிஸ் சாம்பியன்' ஆகிய உலகப் புகள்பெற்ற டெனிஸ் போட்டிகளில் வெற்றி பெறும் வீரர்கள் கோடிக்கணக்கில் பணத்தையும், புகழையும் சம்பாதித்த போதிலும், லண்டனில் வருடாந்தம் நடாத்தப்படும் விம்பிள்டன் டெனிஸ் ஆட்டத்தையே பெரிதாக மதிக்கிறார்கள்.

உலகப் புகழ் பெற்ற டெனிஸ் ஆட்டக்காரர்கள் தாம் டெனின் ஆட்டத்திலிருந்து ஓய்வு பெறுவதற்கு முன்பு 'விம்பிள்டன் சாம்பியன்' என்ற பட்டத்தை ஒரு தடவையாவது பெற்று விட்டால் போதும் என்று நினைக்கும் அளவுக்கு விம்பிள்டன் டெனிஸ் புகழ்பெற்று விளங்குகின்றது.

இச்சாம்பியன் பட்டத்தை பலதடவைகள் பெற்று பின்பு தோல்வி அடைந்த வீரர்களும், தாம் டெனிஸ் ஆட்டத்திலிருந்து ஓய்வு பெறும் போது 'விம்பிள்டன் சாம்பியன்' என்ற பெயருடனே ஓய்வு பெறவிரும்புவதாகக் கூறுகிறார்கள்.

அதற்கு உதாரணமாக ஆண்கள் வரிசையில் அமெரிக்க வீரர் ஜோன் மக்கன்ரோவையும், பெண்கள் வரிசையில் அமெரிக்க வீராங்கனை மாட்டினா நவரத்திலோவாவையும் கூறலாம். இவ் இருவரும் தற்போது நடைபெற்று வரும் விம்பிடள்டன் டெனிஸ் ஆட்டத்தின் கால் இறுதி, அரைஇறுதிப் போட்டிகளில் விளையாடுவதற்கு தகுதி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இரு ஆட்டக்காரர்களும் தோல்வியை இலகுவில் சகிக்கக் கூடியவர்கள் அல்ல. ஜோன் மக்கன்ரோ, விம்பிள்டன் சாம்பியன் பட்டத்தை 81-ம், 83-ம், 84-ம் ஆண்டுகளில் பெற்றவர். இக்காலகட்டத்தில் இவர் உலக டெனிஸ் ஆட்டவீரர்கள் வரிசையில் முதலாம் இடத்தைப் பெற்று விளங்கினார்.

இவரது முன்கோபத்தினால் இவரது புகழ் மளமளவெனச் சரியத் தொடங்கியது. உலகப் புகழ்பெற்ற வீரர்கள் வரிசையில் இவர் பின்னுக்குத் தள்ளப்பட்டார். இவரிடம் தோல்வியடைந்த பெரும் பாலான புகழ்பெற்ற வீரர்கள், இவரைப் படிப்படியாக தோல்வி அடையச் செய்தார்கள். இந்தியாவின் தென் நாட்டு உலகப் புகழ் பெற்ற டெனிஸ் ஆட்டக்காரர்களான விஜய அமிர்தராஜும், ரமேஷ் கிருஷ்ணனும் இவரை தோல்வியுறச் செய்ததும் குறிப்பிடத்தக்கது.

இவை அனைத்துக்கும் இவரது முன்கோபமே காரணம். ஆட்டநேரத்தில் மத்தியஸ்தரின் தீர்ப்பை அடிக்கடி ஆட்சேபிப்பது, தனது சகபாடி ஆட்டக்காரரிடம் கடுமையாள வார்த்தைகளால் உரையாடுவது போன்ற செயல்கள் இவரிடம் தற்போதும் இருந்து வருகிறது.

'தோன்றிற் புகளொடு தோன்றுக, அஃதிலார் தோன்றலில் தோன்றாமை நன்று' என்ற திருவள்ளுவரின் குறளுக்கு அமைய மக்கன்ரோ டெனிஸ் ஆட்டத்திலிருந்து ஓய்வு பெறுவதற்கு முன்பு, 'விம்பிள்டன் சாம்பியன்' பட்டத்தை பெற்றே ஓய்வுபெறுவேன் என சமீபத்தில் பத்திரிகை நிருபர்களுக்குக் கூறியுள்ளார்.

இதே போன்ற செயல்பாட்டை உடையவர்தான் வீராங்கனையான மாட்டினா நவரத்திலோவாவும்: இவர் எட்டு வருடங்கள் தொடர்ச்சியாக விம்பிள்டன் சாம்பியன் பட்டத்தை வென்று புதிய சாதனை படைத்த வீராங்கனை. செக்கோஸிலாவாக்கியாவில் பிறந்த இவர் தற்போது அமெரிக்காவில் வாழ்ந்து வருகிறார்.

கடந்த வருடம் நடைபெற்ற மேற்படி போட்டியின் இறுதி ஆட்டத்தில், ஜெர்மன் இளம் வீராங்கனையான ஸ்ரேபி கிருபிடம் இவர் தோல்வியடைந்தார். ஆட்டம் முடிவடைந்ததும் ஸ்ரேபி கிருப் இவருடன் கைகுலுக்கச் சென்ற போது, அவரின் கையைத் தட்டிவிட்டு கோபாவேசத்துடன் தன் இருப்பிடம் சென்று அமர்ந்து கொண்டது ரசிகர்கள் அனைவருக்கும் பெரும் ஆச்சரியத்தை ஊட்டியது.

இதே சோடிகள் தான் இம்முறையும் கால்இறுதி, அரை இறுதி மோதலுக்குத் தெரிவாகியுள்ளார்கள். 'வெற்றி தான் என் குறிக்கோள்' எனக் கூறும் மாட்டினா நவரத்திலோவா வெற்றி பெறுவாரா? அல்லது 'எதையும் தாங்கும் இதயம் படைத்தவள்' நான், எனக் கூறும் ஸ்ரேபிகிருப் வெற்றி பெறுவாரா, என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

### பொறுமைசாலிகள்

இம்முறை அரைஇறுதியாட்டத்துக்குத் தெரிவான மற்றைய மூன்று வீரர்களைப் பற்றி கூறுவதாகில். இவர்கள் மூவரும் பொறுமையின் சின்னங்கள்.

செக்கோஸ்லாவாக்கிய வீரர் இவான் லெண்டில், தற்போது உலக டெனிஸ் ஆட்டத்தில் மூதன்மையானவர், விம்பிள்டன் டெனிஸ் பட்டத்தை இருதடவைகள் பெற்றவர், அனுபவசாலி, பொறுமைசாலி, எதையும் தாங்கும் இதயம் படைத்தவர்.

அடுத்தவர் ஜெர்மன் ஆட்டவீரர் பொறிஸ் பேக்கர் இளம் ஆட்ட வீரரான இவர் 'விம்பிள்டன் டெனிஸ்' பட்டத்தை அடுத்தடுத்து மூன்று தடவைகள் பெற்றவர்.

உலகப் புகழ்பெற்ற ஆட்டங்கள் அனைத்திலும் அடுத்தடுத்து பங்கு பற்றியதால் கடந்த வருடம் தனது சாம்பியன் பட்டத்தை பறிகொடுத்தார். அதுவுமின்றி, 'இவருக்கும் இவரது பயிற்சியாளருக்குமிடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளே, எனது மகனின் தோல்விக்கு காரணம்' என பொறிஸ் பேக்கரின் தந்தை கடந்த வருடம் பத்திரிகையாளரிடம் கூறியது குறிப்பிடத்தக்கது.

தற்போதைய சாம்பியனான ஸ்ரீபன் எட்பேர்க், ஆஸ்திரேலிய வீரர். இவர் மிகவும் பொறுமைசாலியும், மிகவும் அமைதியாகவும், எதிரியின் பலவீனத்தை அவதானித்து அதற்கு தகுந்தாற் போல், தனது ஆட்டத்தை மாற்றி விளையாடக் கூடியவர்.

இவருக்கு இம்முறை இளம் ஆட்ட வீரரான ''சியாங் சுங்'' ஒரு பலப்பரீட்சையாக இருந்தார். கால்இறுதி ஆட்டத்தில் இவர் சியாங்சுங்குடன் மூன்று மணித்தியாலங்களாகப் போட்டியிட்டு தனது அனுபவத்தால் வெற்றி பெற்றார்.

'சியாங்சுங் சிறந்த ஆட்டக்காரர். அவர் என்னை மிகவும் அலைக்கழித்துவிட்டார்' என ஸ்ரீபன் எட்பேக்கர் கூறியுள்ளார்.

### ஜிம்மி கோனஸ்

வயது முதிர்ந்த அமெரிக்க ஆட்ட வீரரான ஜிம்மி கோனஸ், இம்முறை 2வது சுற்றிலேயே தோல்வி அடைந்தது உலக டெனிஸ் ரசிகர்களுக்குப் பெரும் கவலையைக் கொடுத்துவிட்டது.

மிகவும் 'காஷியமாக' டெனிஸ் திடலில் விளையாடுபவர். விம்பிள்டன் டெனிஸ் பட்டத்தை இவர் 74ம் ஆண்டும், 82ம் ஆண்டும் பெற்றவர். 36 வயதான இவர் விம்பிள்டன் திடலில் கடந்த 18 வருடங்களாக சளையாது பங்குபற்றி ரசிகர்களின் மனதில் நிலையானஇடத்தைப்பெற்றவர்.

இம்முறை இவர் விம்பிள்டன் டெனிஸ் போட்டியில் பங்குபற்றும் ஆட்டங்கள் அனைத்திற்கும், தனது இளம் வயதான மகனையும் கூட்டிக் கொண்டே வந்தார். இவர் 2வது சுற்றில் தனக்கு 11வயது இளையவரான தனது சகபாடியான அமெரிக்க வீரர் டான் கோல்டினிடம் தோல்வியடைந்தபோது ''உன்னை எனது மகன் தோற்கடிப்பான்'' என நகைச்சுவையாகக் கூறினார்.

இதைக் கேட்டு அத்திடலிலிருந்த ரசிகர் கூட்டம் வாய்விட்டுச் சிரித்தபடியே எழுந்து நின்று கரகோஷம் செய்தனர்.

''வெற்றியும்— தோல்வியும் ஒன்றுதான்'' என்ற அடிப்படையை மையமாகக் கொண்டு திகழ்வதால்தான் ''விம்பிள்டன் டெனிஸ்'' உலகில் முன்னணி வகிக்கிறது.

நியூசாந்தி யாழ்நகர்
10-30, 2-30 மணிக்கு
மோகன், ரேவதி
குங்கும சிமிழ்
(ஈஸ்ட்மன் கலர்)

ஹரன் சினிமா
(யாழ்ப்பாணம்)
6-வது வெற்றி வாரம்
சத்தியராஜ்—நதியா
நடித்த
சின்னத்தம்பி
பெரியதம்பி

## ஆலயத்துக்கு சுற்றுமதில்

(சுன்னாகம்)

சுன்னாகம் மயிலணி இராஜ இராஸ்வரி அம்பாள் ஆலய வளவிற்கான சுற்றுமதில் அமைக்கும் பணி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. வெளிநாட்டிலுள்ள அடியார் ஒருவரின் உதவியினால் இச் சுற்றுமதில் அமைக்கும் பணி நடைபெற்று வருவதாக அறியப்படுகிறது.

## பதின்மூன்று சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன

(கொழும்பு)

பொலிசாரும், இராணுவத்தினரும் பதின்மூன்று சடலங்களைக் கண்டெடுத்துள்ளனர்.

குருநாகல், புலத்கொகுபிட்டிய, வவுனியா, மொறட்டுவ ஆகிய இடங்களில் இந்த சடலங்கள் கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

குருநாகலில் கண்டெடுக்கப்பட்ட ஏழு சடலங்களில் மூன்று சடலங்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களுடையது என பாதுகாப்பு பகுதியினர் தெரிவித்தனர்,

இவர்கள் அனைவரும் தத்தம் வீடுகளிலிருந்து கடத்தப்பட்ட பின்னர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனக்கூறப்படுகிறது.

## ஈரானிலிருந்து 80,000 தொன் மசகு எண்ணெய்

(கொழும்பு)

ஈரானிலிருந்து 80 ஆயிரம் தொன் மசகு எண்ணெயை உடனடியாகத் தருவிப்பதற்கு பெற்றோலியம் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கிறது.

எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தடுக்கும் விதமாகவே மேற்படி மசகு எண்ணெயைத்தருவிப்பதற்கு கூட்டுத்தாபனம் முடிவு செய்திருக்கிறது.

எதிர்வரும் 15ம் திகதி இது இலங்கை வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதனை ஏற்றிவரும் எண்ணெய்க்கப்பல் திருகோணமலை துறைமுகத்துக்கே நேரடியாக வரவிருக்கிறது.

கொழும்பு கடற்பிரதேசத்தில் கடுமையான காலநிலை நிலவுவதன் காரணமாகவே சம்பந்தப்பட்ட கப்பல் திருமலைத் துறைமுகத்துக்கு வரவிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த எண்ணெயை இறக்குமதி செய்வதற்கு பெற்றோலியம் கூட்டுத்தாபனத்துக்குமுப்பது கோடி ரூபாவுக்கு மேல் செலவாகியிருப்பதாக கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன.

## பாடசாலைகள் சீராக இயங்க நடவடிக்கை

(சுன்னாகம்)

''பாடசாலைகளாயிருந்தாலும் அல்லது வேறெந்த நிறுவனமாயிருந்தாலும் அவை சீராக இயங்கவேண்டும். அவ்வாறு இயங்கிய பின்னரே விழாக்களும், கொண்டாட்டங்களும் மேற்கொள்ளப்பட வேண்டும். இராமநாதன் மகளிர் கல்லூரியும் சிறப்பாகச் செயற்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே பவள விழாக்களைக் கொண்டாடுவது பொருத்தமாயிருக்கும்''.

இவ்வாறு மருதனமடம் கோட்டக்கல்வி அலுவலகப் பொறுப்பதிகாரி திரு. ஆர். கே. குலசேகரன் அண்மையில் இராமநாதன் மகளிர் கல்லூரியில் பாடசாலை மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளை ஆராய்வதற்காகக் கூட்டப்பட்ட பழைய மாணவிகள் சங்கக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

இளைப்பாறிய அதிபர் திருமதி ஞா. சோமசுந்தரம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

தொடர்ந்து பேசிய திரு. குலசேகரன் கூடுயதாவது;-

''இக்கல்லூரியை உயர் நிலைக்குக் கொண்டுவரச் சகலரும் பாடுபட வேண்டும். இராமநாதனின் காணி பொன் பூமியாக வேண்டும். போதிய கட்டிட வசதியுள்ள போதிலும் தாக்குதல் நடவடிக்கையாலும், பராமரிப்புக் குறைபாட்டாலும் சீரழிந்த கட்டிடங்கள் புதுப்பிக்கப்பட வேண்டும்.''

### மலையகத்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

வாறுதான்பிரிந்தது இந்தியாவில் மாநில சுயாட்சி முறை மூலமும், அமெரிக்காவில் சமஷ்டிமுறை மூலமும், சோவியத் ரஷ்யாவில் பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய சுதந்திரக்குடியரசு கூட்டாட்சி மூலமும் தீர்வுகாணப்பட்டுள்ளது.

சீனாவில் ஒற்றையாட்சியின் கீழ் சுயாட்சிப் பிரதேசங்கள் வழங்கப்பட்டதன் மூலம் தேசிய இனப்பிரச்னைக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

தேசிய இனப்பிரச்னைக்கு இவ்வாறு பல வழிகளில்தீர்வு இருந்தாலும்கூட ஒரு பொது அம்சத்தைக் காணமுடிகிறது. தேசிய இனப்பிரச்னைக்கு பிரதேச அடிப்படையில் மாத்திரமே தீர்வுகாண முடியுமென்ற உண்மையே அதுவாகும். எனவேதான் மலையகமக்களின் தேசிய இனப்பிரச்னை பிரதேச அடிப்படையில் தீர்க்கப்படவேண்டுமெனக் கோருகிறோம்.

### நடைமுறை சாத்தியமல்ல

மலையகமக்கள் அடர்த்தியாக வாழும் பிரதேசத்தை ஒன்றிணைப்பது என்பது நடைமுறைக்கு சாத்தியமற்ற விடயமல்ல. கிழக்கில் அம்பாறை மாவட்டத்தை உருவாக்க முடியுமானால் வன்னியிலே கிளிநொச்சி மாவட்டத்தை உருவாக்க முடியுமானால் அரசியல் நோக்கத்திற்காக திருகோணமலை மாவட்டத்தில் ஒரு சேருவிலை தொகுதியை உருவாக்க முடியுமானால் இது ஒன்றும் செய்யமுடியாத காரியமல்ல.

## உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 23ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. 31ந்திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

0 9 0

நீர்வேலி அருள்மிகு செல்லக் கதிர்காமசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் கடந்த திங்கள் முதல் நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 20ந் திகதி வியாழக்கிழமை தீர்த்த உற்சவமும் வெள்ளிக்கிழமை திருக்கல்யாண உற்சவமும் நடைபெறும்.

0 0 0

### திருவாசகம் ஓதல்

மண்டைதீவு முத்துமாரியம்மன் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை திருவாசக முற்றோதல். கவியரங்கம், கருத்தரங்கம் என்பன நடைபெறவுள்ளன. மண்டைதீவு சைவ வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. ச. சிவப்பிரகாசம் தலைமையில் இந்த நிகழ்ச்சிகள் நிகழும்.

# யாழ். செயலக ஊழியர்கள்
## 2 வருட சம்பள முற்பணம் பெறுகின்றனர்

(சுண்டுக்குளி)

யாழ். செயலக ஊழியர்களுக்கு இரண்டு வருட சம்பள முற்பணம் வழங்கப்பட்டு வருகின்றது.

வடக்கு கிழக்கு பகுதிகளில் கடந்த 87-ம் ஆண்டு பிற்பகுதிக்குப் பின்இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து பாதிப்புக்குள்ளாகிய அரச ஊழியர்களுக்கு இருவருட சம்பள முற்பணம் வழங்குவதென்று இலங்கை அரசு அறிவித்ததைத் தொடர்ந்து யாழ். செயலக ஊழியர்களும் மற்றும் உதவி அரசாங்க அதிபர் அலுவலக ஊழியர்களும் விண்ணப்பித்திருந்தனர். யாழ். பதில் அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் எடுத்த நடவடிக்கையின் பயனக மேற்படி சம்பள முற்பணம் வழங்கப்பட்டு வருகிறது.

இப்பணம் 10 வருடங்களை முழுமையாகப் பூர்த்தி செய்த நிரந்தர நியமனம் பெற்று உறுதி செய்யப்பட்ட ஊழியர்களுக்கே வழங்கப்படுகிறது. 10 வருடங்களைப்பூர்த்தி செய்யாது ஊழியர்களுக்கு ஒரு வருடப் பணமேவழங்கப்படுகிறது.

### இப்படியும் மோசடி

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆஸ்பத்திரியில் தனது குழந்தையுடன் 'வார்ட்டில்' தங்கியிருந்த ஒரு இளம்பெண்ணிடம் வைத்தியசாலை ஊழியராக நடித்து இருநூறு ரூபா பணத்தை மோசடிப்பேர்வழி ஒருவர் அபகரித்துச் சென்றுள்ளார்.

இச்சம்பவம் நேற்று 24-ம் வார்ட்டில் நிகழ்ந்தது. பணத்தைப் பறிகொடுத்தவர் முல்லைத்தீவைச் சேர்ந்த திருமதி பூமணி இராசேந்திரமாவார். (கு)

### இலங்கையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தமிழர்களின் இம்முயற்சிக்கு நெதர்லாந்தில் இருக்கும் நெதர்லாந்து சமாதான, மனிதஉரிமை அமைப்புக்கள் ஆதரவளிக்க முன்வந்திருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

இதேபோன்ற சமாதான யாத்திரைத் திருவிழா ஒன்று அடுத்தமாத முற்பகுதியில் சுவிஸ்ஸிலும் நடைபெறவுள்ளது.

### பாடசாலைகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாம் தவணை விடுமுறைக்குப் பின்னர் பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிக்கும் திகதி பற்றி விரைவில் அறிவிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# வடமராட்சியில் பாடசாலைகள் இயங்கவில்லை

(வடமராட்சி)

வடமராட்சியில் பாடசாலைகளும், தனியார் கல்வி நிலையங்களும் இயங்கவில்லை.

வடமராட்சி மாணவர் ஒன்றியம் துண்டுப்பிரசும் ஒன்றை வெளியிட்டதை அடுத்தே நேற்றுமுன்தினம் முதல் பாடசாலைகள் இயங்கவில்லை எனத் தெரியவருகிறது,

தனியார் கல்வி நிலையங்களும் முற்ருக இயங்கவில்லை.

மாணவர்களின் பாதுகாப்பு வலியுறுத்தப்படும்வரை பாடசாலைகள் நடைபெருது என மேற்குறிப்பிட்ட துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிளிநொச்சிஷெல்தாக்குதல் ஆசிரியர் சடலம் ஒப்படைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி 3-ம்வாய்க்கால் பன்னங்கண்டி அரசினர் பாடசாலையில் இடம்பெற்ற ஷெல் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகிப் பலியான பாடசாலையின் ஆசிரியர் வேலுப்பிள்ளை சங்கரப்பிள்ளையின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் நடைபெற்ற மரணவிசாரணையின்பின்னர் அவரது மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டது.

இம்மரணம் தொடர்பான மரணவிசாரணையை மாவட்ட மரண விசாரணை அதிகாரி டாக்டர் கே. திருலோகமூர்த்தி மேற்கொண்டார். சடல பரிசோதனையை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே. சிவகுமார் மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்தார்.

இத்தாக்குதல் சம்பவத்தில் படுகாயமடைந்த இப்பாடசாலையின் அதிபர் திரு. சிவஞானம் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவருகிருர்.

இத்தாக்குதல் சம்பவத்தில் பாடசாலை மாணவர்கள் படுகாயமடைத்தது தெரிந்ததே.

# புதிய சங்கீத,நடன ஆசிரியர்:
## கல்வித்திணைக்களத்தில் நியமனக் கடிதங்கள்

(யாழ்ப்பாணம்)

புதிதாக நியமனம் பெற்றுள்ள சங்கீத-நடன ஆசிரியர்களுக்கான நியமனக்கடிதங்கள் யாழ்,கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன,

கல்வி அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தின் கீழ் சங்கீத ஆசிரியர்களாக 46, பேரும் நடன ஆசிரியர்களாக 19பேரும் நியமனம் பெற்றுள்ளனர்.

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சினுல் இக்கடிதங்கள் யாழ். கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

### 85 ஆயிரம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்படும்போது தேவையான தகமைகளைக் கொண்டவர்களுக்கு வாய்மொழி மூலமாகவும், எழுத்து மூலமாகவும் ஒரு பரீட்சையை நடாத்தி, திறமையின் அடிப்படையில் நியமனம் வழங்கப்படவேண்டுமென்று நேற்று நடைபெற்ற அரசாங்க பாராளுமன்றக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

# பெண்களைசேர்ப்பதை தவிர்க்க முடிவு

(பருத்தித்துறை)

பருத்தித்துறைபலநோக்குச் கூட்டுறவுச் சங்கக்கிளைகளில் கிளை முகாமையாளர்களாகவோ விற்பனையாளர்களாகவோ பெண்களைச் சேர்த்துக் கொள்வது தவிர்க்கப்படவேண்டும் என சங்கஇயக்குநர்சபை தீர்மானித்துள்ளது.

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச்சங்ககிளை முகாமையாளர், விற்பனையாளர்களில் அனேகமானவர்கள் பெண்களாக இருப்பதனுல் அவர்களால் கிளைகளில் பாரமான வேலைகளைச் செய்ய முடியாது; பாவனையாளர்களும் பாதிப்படைகின்றன, இதனுலேயே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

### தமிழ் இளைஞர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை ராகஸ்தோட்டப்பகுதியில் தமிழ் இளைஞர் ஒருவர் ஆயுதங்களுடன் படையினரால் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### ஊர்காவல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்க மறுப்பு தெரிவித்துள்ளனர்.

கடந்த சில தினங்களில் பதுளையில் ஐந்திற்கும் மேற்பட்ட தோட்டப்பகுதிகளில் இந்த துப்பாக்கி அபகரிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளது. அச்சம் காரணமாக ஊர்காவல்படையினர் பலர் தமது ஆயுதங்களைப் பொலிஸ் நிலையங்களில் ஒப்படைத்து வருகிருர்கள்.

தீவிரவாதிகளின் அச்சுறுத்தல்களையடுத்தே ஊர்காவல் படையினர் ஆயுதங்களை ஒப்படைப்பதுடன் கடமையிலீடுபட மறுத்தும் வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### சுவிஸ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பேர் பலியாகியதுதெரிந்ததே.

கரணவாயைச் சேர்ந்த இரு சகோதரர்களானபுஷ்பநாதன் முரளி (வயது-12), புஷ்பநாதன் முகுந்தன் (வயது-11), தம்பிராசா சத்தியன் ((வயது-30), சின்னத்தம்பி தேவராசா (வயது-41) ஆகியோரே மேற்படி விபத்தில் பலியானுர்கள்.

இம்மாதம் 1ம் திகதி சனிக்கிழமை இலங்கை நேரப்படி நள்ளிரவு 12 மணியளவில் தொழிற்சாலை ஒன்றில்'காஸ்' சிலிண்டர் வெடித்ததினுல் இவ்விபத்து ஏற்பட்டது.

தொழிற்சாலையில் ஏற்பட்ட தீஅக்கட்டிடத்தின் மாடிக்கும் பரவியபோதே மாடியில் வசித்து வந்த மேற்படி நால்வரும் பலியாகினர்.

### வதிரி

(1-ம் பக்கத் தொடர்ச் )

'ஷெல்' தாக்குதலால் பாதிக்கப்பட்ட பின்னர் வீட்டில் கொள்ளைச்சம்பவங்களும் இடம்பெற்றன.

எஸ். தம்பையா [யார்வத்தை], பொன்னையா ஐயாத்துரை [யார்வத்தை] எஸ். ஜெகராசாசிங்கம் [உதயப்பனர்வளவு] ஆகியோரின் வீடுகளும் ஷெல் தாக்குதலால் சேதமடைந்தன.

அத்துடன் புலவரோடைப் பகுதியில் பல தோட்டங்களில் ஷெல் விழுந்து வெடித்தமையால் பயிர்கள் நாசமாகின.

#### சந்தை கூடியது

வதிரிச் சந்தியில் நேற்று முதல் மீண்டும் மீன்சந்தையில், பழைய உப-தபால் கந்தோருக்கு முன்பாக காய்றிக சந்தையும் இயங்குகின்றன, (51]

### ஒய்வுபெற்ற

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களங்களுக்கு சென்று தம்மை பதிவு செய்து கொள்ளுமாறும், தெரிவு செய்யப்படுபவர்களுக்கு ஓய்வு பெற்ற காலத்தின் சம்பளத்தின் இரண்டு மடங்கு சம்பளம் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு வாரங்களாக போக்குவரத்துச் சேவை ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் அரசு தெரிவித்துள்ளது. ரயில்வே திணைக்களத்திலும் இதே போன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்ட இருவர் நேற்று தீவிரவாதிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகி மரணமானதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இந்தியத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வருகை காரணமாக ஏற்பட்டுள்ள அமைதியின்மை வேதனைக்குரியது.

''எமது நாட்டில் எந்த ஒரு வெளிநாட்டு ஊடுருவலுக்கும் நான் இடம் கொடுக்காதவன். அதனைக் கடுமையாகக் கண்டிக்கிறவன்.

இன்று இந்தியா நடந்து கொள்ளும்விதம் மிகவும் வேதனைக்குரியது.''

### தேடுதல் நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ந்தும் தேடுதல் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. நகரில் பாதுகாப்பும் பந்தோபஸ்தும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் வருகையும் நேற்று கணிசமான அளவு இருந்தது. தூர இடங்களில் இருந்து சந்தைக்கு பொருட்கள் கொண்டுவரப்பட்டது.

### மாணிக்கவாசகர் சுவாமிகள் தினம்

(மட்டுவில்)

அல்லாரை காந்தீய சேவா சங்கம், மாணிக்கவாசக சுவாமிகள் தினத்தை இம்மாதம் 8ம் திகதி வெள்ளிக்கிழமை கொண்டாடவிருக்கிறது.

### இளைஞர் காயம் இருவர் கைது

(வடமராட்சி)

பொலிகண்டியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார். இருவர் கைது செய்யப்பட்டனர்.

நேற்றுக்காலை பொலிகண்டியிலுள்ள ஆலடி என்னும் பகுதியில் கூட்டமாக நின்றவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டபோது தங்கவேலாயுதம் நந்தகுமார் [வயது-24] என்பவர் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நாகராசா குமார் (வயது-19) வைரமுத்து தெய்வேந்திரம் (வயது-19) ஆகிய இருவருப் கைது செய்யப்பட்டனர். இச்சம்பவத்தையடுத்துப் பொலிகண்டிப் பகுதியில் பதற்றம் நிலவுகின்றது,

### மினிபஸ் விபத்து பலர் காயம்

(யாழ்ப்பாணம்)

கொக்குலில் பூனுறிமடத்தில் நேற்றுக்காலை மினிபஸ் ஒன்று மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஐவர் படுகாயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏழாலையிலிருந்து யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த மினிபஸ் பூனுறிமடத்தில் விபத்துக்குள்ளானது.

காயமடைந்தவர்களான சுதுமலையைச் சேர்ந்த விஸ்வலிங்கம் தில்லைநாதன் (வயது 35). ஏழாலையைச் சேர்ந்த கணேஸ் (வயது 15], ஓமந்தையைச் சேர்ந்த ஈ. இராஜன் (வயது 29). ஏழாலையைச் சேர்ந்த தவராசா இராமநாதன் (வயது35), கோண்டாவிலைச் சேர்ந்த கந்தையா சண்முகதாஸன் (வயது 52) ஆகியோர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (கு)

### அரச எதிர்ப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுதொடர்பாக அக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது.

''கடந்த சிலவருடங்களாக மூடப்பட்டிருந்த பல்கலைக்கழகங்கள் தற்போது திறக்கப்பட்டுள்ளது. எனினும் தீய சக்திகளின் நடவடிக்கைகளையடுத்து பல்கலைக்கழகங்களை மூட அரசு முயற்சிக்கிறது.

''மாணவர்களின் பாதுகாப்பிற்கு அரசு உத்தரவாதமளித்துள்ள போதிலும் இராணுவமும், பொலிஸாரும் பல்கலைகழகங்களுள் நுழைந்து மாணவர்களை கைது செய்கிருர்கள் காணுமல் போன 17 மாணவர்கள் நிலைபற்றி இதுவரை எதுவும் தெரிவிக்கப்படவில்லை இவற்றை கண்டிக்கும் முகமாக பெரும் எதிர்ப்பு இயக்கம் ஒன்றை ஆரம்பிக்க மக்கள் ஆதரவு நல்க வேண்டும்.

#### 37 மாணவர் கைது

இதேவேளை கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர் 57 பேர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு 24 மணித்தியாலத்தின் பின் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வடமராட்சி

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தரங்குகளும் நடைபெற்றன.

பருத்தித்துறை முருகையன் கோவிலுக்கு அண்மையிலும் வல்வெட்டித்துறையில் பஸ் நிலையத்திலும் பொலிகண்டியில் ஆலடி என்னும் இடத்திலும் மில்லரின் கூட்டங்களும் நடைபெற்றன.

### 15 ஆயிரம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாக போக்குவரத்துச்சேவை மட்டுமன்றி வங்கிகள், அரச நிறுவனங்கள், உள்ளுராட்சி ஸ்தாபனங்களும் இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது,

இதன்காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள மோசமான பாதுகாப்பு நிலைமையைச் சமாளிப்பதற்காகவே முப்படைகளையும் சேர்ந்த ஆயுதப் பயிற்சிபெற்ற தொண்டர்கள் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இந்த 15 ஆயிரம் தொண்டர்களும் தென்பகுதியில் தற்போது சேவையிலுள்ள 30 ஆயிரம்படைவீரர்களுடன் இணையவிருக்கின்றனர்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1989ம் ஆண்டு ஜுலை மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003e6/81. Eelanadu P. O. Box No: 49 Telegram, Eelanadu. Telephone 22389. 24126.